# உதயன்

விலை ரூபா 6-00

ஏடு 14 வள்ளுவர் ஆண்டு2030 சித்திரை 23வியாழக்கிழமை (06-05-1999) UTHAYAN A Lively National Tamil Daily இதழ்138



பொதுசன நூலகம் 06 MAY 1999 மாநகர


## மினி சினிமா கொட்டகைகளை மூடுமாறு சுவரொட்டி

யாழ்ப்பாணம், மே 6

நேற்று புதன்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை சகல மினி சினிமாக் கொட்டகைகளையும் மூடும்படி கோரும் சுவரொட்டிகள் விடுதலைப் புலிகளின் பெயரில் யாழ். நகரப் பகுதியில் கடந்த இரண்டொரு தினங்களாக ஒட்டப்பட்டிருந்தன.

அனைத்து மினி சினிமா உரிமையாளர்களுக்கும் எனத் தெரிவித்து எழுதப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டியில் இக்கோரிக்கையை மீறுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மினி சினிமாக்கள் சமூகச் சீரழிவுக்கு வழிகோலுவதாக பல தரப்பிலும் விமர்சனம் செய்யப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. [உ]

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தலைவர் சுட்டுக்கொலை!

வவுனியா, மே 6

புளொட் அமைப்பைச் சேர்ந்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தலைவர் வீரகத்தி குணரத்தினம் (வயது 43) வவுனியாவில் வைத்து நேற்று மாலை 6.45 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திருநாவற்குளத்தைச் சேர்ந்த இவர் தமது உறவினரான கிருபாகரன் என்பவருடன் நகரை நோக்கி வந்து கொண்டிருந்த சமயம் சுரப்பன்காடு என்னும் இடத்தில் சைக்கிளில் வந்த இருவர் இவர்களை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர் என்றும்— குணரத்தினம் அந்த இடத்திலேயே மரணமானார் என்றும்— கூறப்பட்டது.

காலில் காயமடைந்த கிருபாகரன் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த குணரத்தினத்தின் உடலில் ஆறு சூட்டுக் காயங்கள் இருந்தன என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-21-164)

## மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் கொலை முயற்சியிலிருந்து தப்பினார்!

### அவரது மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

மானிப்பாய், மே 6

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த வலிதென் மேற்கு(மானிப்பாய்) பிரதேச சபைத்தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் நேற்று இனந்தெரியாதநபர்களின் துப்பாக்கிச் சூட்டிலிருந்து மயிரிழையில் தப்பினார். அவரது மெய்ப்பாதுகாவலர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தார்.

நேற்று முற்பகல் 11-30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மானிப்பாய் பட்டின சபையிலுள்ள தமது அலுவலகத்தில் இவர் கடமையிலிருந்த போது சைக்கிளில் வந்த இனந்தெரியாத இரு இளைஞர்கள் இவரது அலுவலகத்துக்குள் நுழைய முற்பட்ட சமயம் அலுவலக வாசலில் நின்ற இவரது மெய்ப்பாது

( 10ஆம் பக்கம் பார்க்க)

# படைக்குத் தமிழர் சேர்ப்பு தமிழ்க்கட்சிகள் கண்டனம்

## உலகை ஏமாற்றும் செயல் என்கின்றன

கொழும்பு, மே 6

குடாநாட்டில் இராணுவத்துக்கு ஆள் திரட்டும் அரசாங்கத்தின் செயலை தமிழ்க் கட்சிகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

உலக நாடுகளை ஏமாற்ற அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையே இது என அந்தக் கட்சிகள் வர்ணித்துள்ளன.

குடாநாட்டில் இராணுவத்துக்கு ஆள் திரட்டும் நடவடிக்கைகள் இரு நிலையங்களில் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமாகின; இந்த நடவடிக்கை எதிர்வரும் 22ஆம் திகதி வரை நடைபெறும் என்று பாதுகாப்புத் தரப்பு அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையைக் கண்டித்துத் தமிழ்க் கட்சிகள் கருத்து வெளியிட்டுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்புமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கூறியதாவது:

இராணுவத்தினர் தமிழ் மக்களுக்கு எதிராக வகை தொகையற்ற தொல்லைகளைச் செய்கிறார்கள்; அவர்களைக் கைது செய்து

( 9 ஆம் பக்கம் பார்க்க)

## மடுவிலிருந்து வந்த வான் கடத்தப்பட்டது

வவுனியா, மே 6

மடுவில் இருந்து வவுனியா வந்த பயணிகள் வான் ஒன்று நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டது.

இராசையா ரஞ்சன் என்பவரின் இந்தவான் மடுவில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு நேற்று வவுனியா வந்து சேர்ந்தது.

நேற்று பிற்பகல் பயணிகளுடன் அந்த வான் மடுவுக்கு

(10ஆம் பக்கம் பார்க்க )

## பல்கலை சட்டமூலத்தால் சபையில் அமளிதுமளி

கொழும்பு, மே 6

பல்கலைக்கழக நிர்வாகங்களில் அரசியல்வாதிகளும் பங்குகொள்ள வசதியளிக்கும் பல்கலைக்கழக நிர்வாகச் சட்டமூலம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று அமளி துமளி ஏற்பட்டது.

பிரஸ்தாப சட்டமூலம் தொடர்பாக நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் —

இதனால் அது தொடர்பான விவாதம் பிற்போடப்படுகின்றது என்றும் — நாடாளுமன்றம் நேற்றுக் கூடிய சமயம் சபாநாயகர் அறிவித்தார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபை ஒத்திவைப்புக்கு எதிராக கோஷம் எழுப்பியதால் சபையில் அமளிதுமளி ஏற்பட்டது;

ஐ.தே.க. உறுப்பினர் ஏ. ஏச், எம். அஸ்வர் கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரானாவிடம் இருந்து நகல் சட்ட மூலத்தைப் பறித்துக் கிழித்து எறிந்தார்.

இன்று காலை வரை சபை ஒத்திவைக்கப்பட்டது. (இ-3)

## எந்த ஒரு தமிழனும் படையில் சேரக்கூடாது

### மாணிக்கதாசன் கோரிக்கை

கொழும்பு, மே 6

தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை எந்த ஒரு தமிழ் மறவனும் அரச படையுடன் இணைவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

புளொட் அமைப்பின் உப - தலைவர் என். மாணிக்கதாசன் மேற்கண்டவாறு தமிழ் இளைஞர்களைக் கோரியுள்ளார்.

இது விடயமாகஅவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்தியதற்கான காரணங்கள் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 285 பட்டதாரிகளுக்கு நியமனம்

### 15 ஆம் திகதி அனுராதபுரத்தில் வைபவம்

எண்ணாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 285பட்டதாரிகளுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி நியமனம் வழங்கப்படவிருக்கின்றது.

அனுராதபுரம் சுவர்ணபாலி மகாவித்தியாலயத்தில் அன்று நடக்கும் விசேட வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவர்களுக்கான நியமனக் கடிதங்களைக் கையளிப்பார்.

அரசாங்கத்தின் முன்னுரிமை முயற்சிகளைச் செயற்படுத்துவதற்காக அரச, கூட்டுத்தாபனங்களுக்கு இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 285 பேருக்கு நியமனம் வழங்கப்படுகின்றபோதிலும் 267 பேருக்கே நியமனக் கடிதங்கள் கொழும்பில் இருந்து நாளை இங்கு எடுத்துவரப்படவிருக்கின்றன.

எஞ்சிய 18 பேருக்குரிய முகவரிகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

நியமனம் பெறுபவர்கள் அனுராதபுரம் செல்வதற்கான பயண அனுமதிக்கு தத்தமது பிரிக்கேட் ஊடாக விண்ணப்பிக்கும் படியும்—

பயண முன்னுரிமை பெறுவதற்கான ஒழுங்குகள் யாழ். அரச அதிபரால் செய்து தரப்படும் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 32 பேருக்கு கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 22 பேருக்கும் நியமனம் வழங்கப்பட உள்ளது.

(ஒரு தொகுதி பட்டதாரிகளின் பெயர் விவரம் 9 ஆம் பக்கத்தில்). (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நன்றி செலுத்துவோம்

## யாழ்.| கச்சாய் அ. த. க. வித்தியாலயம்

கொடிகாமம்.

க. பொ. த. (சா|த) பரீட்சை

## பெறுபேறுகள் - 1998

| | | | |
|---|---|---|---|
| சி. சிவரூபி | 5 டி | 3 சி | |
| ச. அமுதினி | 4 டி | 3 சி | |
| சி. சிவசங்கர் | 4 டி | 2 சி | 1 எஸ் |
| யோ. வேணுகா | 3 டி | 3 சி | 1 எஸ் |
| பொ. றெயாசினி | 2 டி | 2 சி | 3 எஸ் |
| க. சுதாகரன் | 2 டி | 2 சி | 2 எஸ் |
| சி. மாலினி | 2 டி | 2 சி | 2 எஸ் |
| க. பவானி | 1 டி | 4 சி | 2 எஸ் |
| க. செந்தூர்நாதன் | 1 டி | 4 சி | 1 எஸ் |
| வே. அகிலன் | 1 டி | 4 சி | 1 எஸ் |
| அ. வற்சலா | 1 டி | 3 சி | 3 எஸ் |
| நா. செந்தூரன் | 1 டி | 3 சி | 2 எஸ் |
| க. தர்மசீலன் | 1 டி | 3 சி | 2 எஸ் |
| அ. தேவகி | — | 6 சி | — |
| ந. பாமதி | — | 4 சி | 3 எஸ் |
| இ. கோபிதாஸ் | — | 4 சி | 2 எஸ் |

எமக்கு வளமூட்டி வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள், தென்மராட்சி வலய அதிகாரிகள், 'சீடா' செயற்திட்ட அதிகாரிகள் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

11 ஆம் வகுப்பு மாணவர்கள்

[65482]

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை பாலசிங்கம் (சிங்கர்)

இராஜ வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த (பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ், கொழும்பு), மனேஜர் செல்லத்துரை பாலசிங்கம் அவர்கள் 2-5-99 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீர்வேலி செல்லத்துரை-ஆச்சிக்குட்டியின் அன்பு மகனும் காலஞ்சென்ற அச்செழு சின்னத்தம்பி- சின்னம்மாவின் அன்பு மருமகனும் பவளராணியின் அன்புக் கணவரும் ஜெயசாந்தி, ஜெயநந்தன், ஜெயராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பார்த்தீபனின் (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்) அன்பு மாமனாரும் பிரதீப், ரகுதீப், கஜபாலினி ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னத்தம்பி, காலஞ்சென்ற இராசமணி, விஜயலட்சுமி, விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சபாரட்ணம், அன்னம்மா, புஸ்பவதி, சர்வானந்தம் (பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ், யாழ்ப்பாணம்), அற்புதராசா செல்வராணி, கோகிலராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பத்மினி, சிவலோகநாதன் (அஞ்சலகம், உரும்பிராய்), நவமணி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (6-5-99) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி அளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ்
104, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.

18/1, டாம் வீதி,
கொழும்பு- 12.

(65476)

## திருமதி றோய் ஜெயமதி

யாழ்ப்பாணம் இல 60/1, கோயில் வீதியை வசிப்பிடமாகவும் வியாபாரிமூலை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கொண்ட திருமதி றோய் ஜெயமதி அவர்கள் 5-5-99 புதன்கிழமை காலமானார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளை றோய் (U N D.P.) அவர்களின் அன்பு மனைவியும் றோஜர்ஸ், வினோத் (பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலகிருஷ்ணன் — கமலேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் ஜமுனா, ராஜகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அந்தோனிப்பிள்ளை - றெஜினா ஆகியோரின் அன்பு மருமகளும் பற்றிமா, அனிற்ரா (கொழும்பு), ஆன்கலிஸ்ரா (ஆசிரியர், பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (6-5-99) வியாழக்கிழமை பிற்பகல் 3. 00 மணியளவில் நல்லடக்கத்துக்காக அர்ச். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A. றோய்

60/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(65486)

## பட்டிமன்ற சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணம் நகரமைய றோட்டரக்ட் கழகம் பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் பட்டிமன்றச் சுற்றுப் போட்டியின் இரண்டு கால் இறுதிப் போட்டிகள் இன்று வியாழன் மாலை 3.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

முதலாவது போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, வயாவிளான் மகாவித்தியாலய அணிகளும்—

இரண்டாவது போட்டியில் வைத்தீஸ்வராக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிகளும் —

விவாதத்தில் பங்குபற்றுகின்றன.

யாழ். இந்துக் கல்லூரி அணி ஏற்கனவே அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. (ஐ)


## தேவை

குழந்தையை பராமரிக்கக்கூடிய பகுதிநேர அல்லது முழுநேர பெண் உதவியாள் தேவை

நேரில் வரவும்.

396, நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோயிலடி)
யாழ்ப்பாணம்.

(65485)

## ஸ்ரீ செல்வா

சினிமா
யாழ்ப்பாணம்.
தினசரி: 10-30, 2-30
(பழைய நேரம்)
T. ராஜேந்தரின்
மோனிசா என் மோனலிசா
(நேரடி CDயில்)

(65480)

## நாகம்ஸ்

சுன்னாகம்.
ரஜனி - குஷ்பு - சரத்பாபு ஜனகராஜ் நடித்த
அண்ணாமலை
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்)

(65483)

## ராஜா

யாழ்ப்பாணம்.
கார்த்திக் -ரம்பா மற்றும் பலர் நடித்த
உள்ளத்தை அள்ளித்தா
10-30, 2-00

(சி/7431)

## லிபேட்டி

தியேட்டர்
அச்சுவேலி
இன்று
T. ராஜேந்தரின்
மோனிசா என் மோனலிசா
காட்சிகள்: 10-30, 2-30
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094-70-212223

(சி/7450)


# மரண அறிவித்தல்கள்

## கோவிந்தபிள்ளை தெய்வேந்திரன்

பருத்தித்துறை. இலங்கை வங்கி உத்தியோகத்தரான கோவிந்தபிள்ளை தெய்வேந்திரன் 05-05-99 இல் காலமானார்.

அன்னார் பருத்தித்துறை புலோலி தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற நிலஅளவையாளர் திரு. திருமதி கோவிந்தபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், மனோரஞ்சித்தின் அன்புக் கணவரும், தர்ஷினி (ஹற்றன் நஷனல் வங்கி, கொழும்பு), தயாளினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஹென்றி ஜெயதிலகவின் (ஹற்றன் நஷனல் வங்கி, கொழும்பு) அன்பு மாமனாரும் யோகநாயகி, சிவராசா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

பிரதான வீதி.
புலோலி தெற்கு, புலோலி.

(சி/7445)

## திருமதி அன்னப்பிள்ளை கதிரித்தம்பி

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை கதிரித்தம்பி 04-05-99 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பி. கதிரித்தம்பியின் அன்பு மனைவியும் சம்பந்தபிள்ளை (கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்), கனகசபை (ஹைற்றாமணி, கொழும்பு), உமையம்மா, புனிதவதி ஆகியோரின் பாசமிகு அன்னையும் செ. சின்னையா (ஓய்வுபெற்ற ஊழியர், தானியக்களஞ்சியம்), சி. சிவஞானம் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சூ. பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மாமியும் வசந்தகுமார் (T. O திருகோணமலை), மைதிலி (அமெரிக்கா), சண்முகப்பிரியா, பிரியரஜனி (சாவ. இந்துக் கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவிகள்) ஆகியோரின் அருமை அம்மம்மாவும் சந்திரமோகன் (லண்டன்), தமயந்தி (ஆஸ்திரேலியா), மாயாராணி (லண்டன்), துஷ்யந்தன் (லண்டன்), கோகுலரமணன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் கலாநிதி பாலகிருஷ்ணன் (அமெரிக்கா), திருமதி விஜயநந்தினி (ஆசிரியை, ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை) ஆகியோரின் துணைவழி அம்மம்மாவும் அர்ச்சனா, அகிலன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05-05-1999 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி. வசந்தகுமார்
(பேரன்)

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

[சி/7443]

## கந்தையா சத்தியமூர்த்தி

அளவெட்டி அலுக்கையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சத்தியமூர்த்தி அவர்கள் 30- 04-99 இல் காலமானார்.

அன்னார் அளவெட்டி அலுக்கை காலஞ்சென்ற கந்தையா—வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் ஜெகதீஸ்வரியின் (முள்ளானை) அன்புக் கணவரும், கயந்தினி, கஜாளினி, கஜேந்திரன் ஆகியோரின் அன்பு தந்தையும் அருளம்பலம் (இளைப்பாறிய உப அதிபர், அருணோதயக் கல்லூரி), சிவபால சுப்பிரமணியம் (மலேசியா), காலஞ்சென்ற வைத்தியலிங்கம் மற்றும் நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (6- 5- 99) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அருளம்பலம், நாகலிங்கம்
(சகோதரர்கள்)

கேணிக்கரை,
அளவெட்டி.

(65470)

## திருமதி நாகரட்ணம் ருக்குமணி

(இளைப்பாறிய ஆசிரியை, அளவெட்டி தெற்கு)

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த திருமதி நாகரட்ணம் ருக்குமணி அவர்கள் 28 - 04 - 99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணம் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர், மல்லாகம்) அவர்களின் அன்பு மனைவியும் சுசீலா, முகுந்தன் (Holiday Inn), ஸ்காந்தன் (ANZ Grindlays Bank) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நடராஜா, சியாமளா, அமுதா ஆகியோரின் மாமியாரும் சுதர்சன் (HN Bank), வாகீசன் (Muslim Commercial Bank), வையந்தன், மிருணாளினி, சுபாஜினி, அருணன், அர்ஜுனா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 29-04-99 அன்று பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
என். கோணேஸ்

"சுசீலகம்",
அளவெட்டி.

(65479)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 நவீன 'அபாச்சி' ஹெலிகளை அமெரிக்கப்படை இழந்தது!

## அல்பேனியாவில் பயிற்சியில் விபத்து

ரிரானா, மே 6

அல்பேனியாவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க விமானப்படையின் அதி நவீன 'அபாச்சி' கவச ஹெலிக்கொப்ரர் ஒன்று வீழ்ந்து நொறுங்கியதாக 'நேட்டோ' படைகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 10 நாள்களில் அமெரிக்கா இழந்த இரண்டாவது 'அபாச்சி' ஹெலி இதுவாகும்.

கொசோவோவில் தரைவழியான தாக்குதலை ஆரம்பிக்க வசதியாக அமெரிக்கா ஒரு தொகுதி 'அபாச்சி' ஹெலிகளை அல்பேனியாவுக்கு அனுப்பி உள்ளது. (ஐ)



நேட்டோ விமானங்களுக்கு எதிராக யூகோஸ்லாவியப் படைகள் ஏவும் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பெல்கிரேட் நகரின் மீது மத்தாப்புப் போல் வெடித்துச் சிதறும் காட்சி. (ஐ)



அல்பேனியாவில் உள்ள தளம் ஒன்றில் அமெரிக்காவின் நவீன 'அபர்ச்சி' (Apache) ஹெலிகள் நிறுத்தப்பட்டிருப்பதை படத்தில் காணலாம். இந்த ஹெலிகளில் இரண்டையே பயிற்சியின் போது அமெரிக்கா இழந்துள்ளது. (ஐ)

# யூகோஸ்லாவியா மீது 7 ஆவது வாரமாக வான்தாக்கு நீடிப்பு!

## 9 லட்சம் பேர் இடம் பெயர்வு

பெல்கிறேட், மே 6

யூகோஸ்லாவியா மீதான அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளின் தாக்குதல் ஆரம்பித்து நேற்றுடன் ஆறு வாரங்கள் கடந்துள்ளன.

இத் தாக்குதல் காரணமாக கொசோவோவில் இருந்து மட்டும் 8 லட்சத்து 75 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளதாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தெரிவித்துள்ளது.

யூகோஸ்லாவியாவின் ஒரு மாகாணமான கொசோவோவில்சிறுபான்மை அல்பேனியர்கள் மீது சோபியர்கள் நடத்தி வந்த தாக்குதல்களைத்தடுப்பதற்காகஇந்த நெருக்கடியில் 'நேட்டோ' தலையிட்டது.

வான் வழித் தாக்குதல் மூலம் அதிபர் மிலோசெவிக்கை சமாதான வழிக்குக் கொண்டுவரப் போவதாகக் கூறி அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் தாக்குதலை ஆரம்பித்தார். யூகோஸ்லாவியாவின் முக்கிய இராணுவ இலக்குகள் மட்டுமன்றி பொருளாதார இலக்குகள் பலவும் நேட்டோவின் கடும்வான் தாக்குதல்களால் நசமாகி உள்ளன.

தலைநகர் பெல்கிரேட் உட்பட முக்கிய நகரங்களும் கொசோவோ மாகாணத் தலைநகர் பிரிஸ்ரீனாவும் நூற்றுக் கணக்கான ஏவுகணைகளால் தாக்கப்பட்டு வருகின்றன.

எந்த மக்களின் மீட்சிக்காக நேட்டோ தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த மக்களில் நூற்றுக்குமேற்பட்டவர்களும் தாக்குதல்களில் சிக்கிப் பலியாக நேரிட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையில் தாம் வெற்றியடைய முடியும் என்ற நம்பிக்கை நேட்டோ படைகளிடையே உள்ளது. எனினும் தாக்குதல் தொடங்கி 42 தினங்களுக்குப் பின்னரும் நேட்டோ விமானங்களைத் திரும்பித் தாக்கும் விமான எதிர்ப்புப் பலத்தை யூகோஸ்லாவியா இழந்து விடவில்லை என்பதை பாதுகாப்பு விமர்சகர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

அயல் நாடுகளில் தஞ்சமடைந்துள்ள லட்சக்கணக்கான அல்பேனிய இன மக்கள் பெரும் மனிதப் பேரழிவைச் சந்திக்கும் நிலையில் உள்ளனர். (ஐ)

## அகதிகளுக்கு நிதி அன்பளிப்பு

புவனர்ஸ்அயர்ஸ், மே 6

ஆஜென்ரீனா நாட்டு தொழிலதிபர் ஒருவர் கொசோவோ அகதிகளுக்கு உதவுமுகமாக 5லட்சம் அமெரிக்க டொலர்களை ஐ.நா. உலக நிறுவனத்திடம் வழங்கியுள்ளார்.

தனியார் ஒருவர் அகதிகளுக்கு உதவவென பெரும் தொகைப் பணத்தினை வழங்கியுள்ளது இதுவே முதல் முறை என ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆஜென்ரீனாவின் சிமெந்துத் தொழிற்சாலை அதிபர் மாலியா லாகூன் என்பவரே பெரும் தொகையை அன்பளிப்பாக வழங்கியவராவார். (ஐ-க)

## நவீன றொக்கெற் ஏவும் முயற்சி தோல்வி!

லொஸ் ஏஞ்சல்ஸ், மே 6

ஒலியின் வேகத்தைவிட எட்டு மடங்கு வேகத்தில் செல்லக் கூடிய நவீன றொக்கெற் ஒன்றை ஏவுவதற்கு அமெரிக்க விஞ்ஞானிகள் மேற்கொண்ட முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது.

'எக்ஸ்—34' எனப்படும் இந்த அதிவேக றொக்கெற் கடந்த வெள்ளியன்று கலிபோர்னியாவில் உள்ள றைடென் விமான ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து ஏவப்பட்டது.

விண்வெளிக்கு பொதுமக்களை அனுப்ப வசதியாக வடிவமைக்கப்பட்ட இந்த றொக்கெற் ஆள்கள் இன்றி முதலில் செலுத்தப்பட இருந்தது.

எனினும் தொழில் நுட்பக் காரணங்களால், திட்டமிட்டபடி அதனை விண்ணில் செலுத்த முடியாமற் போனதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நேட்டோ தலைமையகத்துக்கு அதிபர் கிளின்ரன் விஜயம்

வாஷிங்ரன், மே 6

யூகோஸ்லாவியா மீது நேட்டோ நடத்திவரும் தாக்குதல்கள் 42 ஆவது நாளைக் கடந்துள்ள நிலையில் —

இந்தத் தாக்குதலின் விளைவுகள் குறித்து விவாதிப்பதற்காக அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் நேற்று பிரசெல்ஸ் பயணமானார்.

பிரசெல்ஸில் உள்ள நேட்டோ தலைமையகத்தில் அவர் தலைவர்களையும், படைத் தளபதிகளையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொசோவோ நெருக்கடிக்குத் தீர்வுகாண ராஜீக முயற்சிகள் அனைத்தையும் கண்டறியத் தான் தயாராக இருப்பதாக ஐரோப்பா புறப்படுவதற்கு முன்னர் கிளின்ரன் கருத்துத் தெரிவித்தார். (ஐ)

## கிளின்ரன் உத்தரவு

வாஷிங்ரன், மே 6

'நேட்டோ' படையினரால் கைது செய்யப்பட்டிருந்த இரண்டு யூகோஸ்லாவிய அதிகாரிகளை விடுதலை செய்யுமாறு அதிபர் கிளின்ரன் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்க இராணுவ வீரர்கள் மூவரை சேர்பிய இராணுவத்தினர் விடுவித்ததைத் தொடர்ந்து இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பனாமாவில் பெண் அதிபர்

பனாமா, மே 6

பனாமா மக்கள் தமது நாட்டின் அதிபராக முதல் முறையாக பெண் ஒருவரைத் தெரிவு செய்துள்ளனர்.

அமெரிக்க இராணுவத்தை நாட்டில் இருந்து வெளியேற்றிபனாமா கால்வாயை நாட்டின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதை விரும்பியே மக்கள் அவரைத்தமது அதிபராகத் தெரிவு செய்துள்ளனர். மிரியாமொஸ்கோசோ என்ற பெண்ணே 44.21 சதவீத வாக்குகள் பெற்று அதிபராகி உள்ளார். (ஐ)

### உலக அரங்கில்

## பலஸ்தீனியர் ஆத்திரம்

ஜெருஸலேம், மே 6

சுதந்திர பலஸ்தீனப் பிரகடனத்தை அதிபர் யாஷீர் அரபாத் அறிவிக்காததை அடுத்து நேற்று முன்தினம் பலஸ்தீனத்தின் பல இடங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

நூற்றுக்கணக்கான பலஸ்தீனியர்கள் மேற்குக் கரையில் உள்ள இஸ்ரேலியப் படைகள் மீது கற்கள் மற்றும் குண்டுகளை வீசித் தாக்கியுள்ளனர்.

மே மாதம் 4 ஆம் திகதி சுதந்திர பலஸ்தீனப் பிரகடனத்தை அறிவிப்பதற்காக அரபாத் முன்னர் கூறியிருந்தார். ஆனால் பின்னர் அவர் அதிலிருந்து பின்வாங்கிவிட்டமைதெரிந்ததே.

இதனால் ஆத்திரமுற்ற பலஸ்தீனியர்களே வன்செயலில் ஈடுபட்டுள்ளனர்.

அவசரப்பட்டு சுதந்திரப் பிரகடனம் செய்யவேண்டாம் என்று அதிபர் கிளின்ரனும், யெல்ட்சினும் அரபாத்தை கேட்டிருந்தனர். (ஐ-க)

# குர் ஆன் நூல்பற்றிய சர்ச்சையால் குவைத் நாடாளுமன்றம் கலைப்பு!

குவைத் சிற்றி, மே 6

அரசு வெளியிட்ட குர் ஆன் நூலில் தவறுகள் இருப்பதாக எழுந்துள்ள சர்ச்சையை அடுத்து குவைத் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கிறது.

அரசு வெளியிட்ட சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் குர் ஆன் பிரதிகளிலும் சரியான தகவல் இடம் பெறவில்லை என்றும் —

இதற்குக் காரணமான இஸ்லாமிய விவகார அமைச்சர் அகமத் அல் ஸஹிப்பை பதவி நீக்கம் செய்யப் போவதாகவும் —

சட்டத்துறை அமைச்சு அச்சுறுத்தி உள்ளது.

சர்ச்சை அதிகரித்ததை அடுத்து குவைத் அமீர் ஷேய்க் ஜவ்வா் அகமத் அல்சபா நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். (ஐ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

ஜோசப் பிரான்சிஸ் அனிஸ் குமார் என்பவரது தேசிய அடையாள அட்டை சாட்டி என்னும் இடத்தில் 02-05-99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் டென்சி வீடியோ சென்ரர், 533, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(65462)

வெற்றிவேல் ஜெயதீபன் என்பவரதுவிசேட அடையான அட்டை (இல.091009090), தேசிய அடையாள அட்டை, விண்ணப்பப்பற்றுச்சீட்டு என்பன 02-05-99 அன்று மனோகரா தியேட்டர் சந்திக்கும் தட்டாதெருவிற்கும்இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் லக்ஷன் வீடியோ சென்ரரில் ஒப்படைக்கவும்.

(65444)

திருமதி அகத்தா தியோமரீ என்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகள் 03-05-99 அன்று யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 129, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சேர்ப்பிக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(65443)

லில்லி விஜயரட்ணம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை(இல. 546641546V), விசேட அடையான அட்டை என்பன சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் 29-04-99 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீகாந்தா பாம், K K.S. வீதி, இணுவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(65437)

செல்வராசா கவிதா மாவிட்டபுரம் தெல்லிப்பழை ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0907001591) திருநெல்வேலிச் சந்தையில் 30-4-99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து துளசி பல சரக்கு வாணிபம், இருபாலைச் சந்தி, இருபாலை என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

[65440]

அருட்சோதிவர்ணன் அருட்செல்வி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (805562846V) நாச்சிமார் கோயிலுக்கும் யாழ். பஸ் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல.3, சேர். பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் அல்லது யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

[சி/7428]

பொன்னாலை தெற்கு சுழிபுரத்தைச் சேர்ந்த கந்தையா தருமாதேவி என்பவரது தேசிய அடையாள அட்டை [இல. 677611065V] அல்லைப்பிட்டிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் 01-05-99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மாவட்ட வைத்திய சாலை, ஊர்காவற்றுறையில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

[65451]

லில்லி விஜயரட்ணம் என்பவருடைய வங்கிப் புத்தகம் (சுன்னாகம் மக்கள் வங்கி) சுன்னாகத்திற்கும் இணுவில் சந்திக்கும் இடையில் 28-4-99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீ காந்தா பாம், கே. கே. எஸ் வீதி, இணுவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

[65438]

### விற்பனைக்கு

நல்ல தரமான (முதிரை) மரத்தில் செய்த தேநீர் சாலைக்கான கவுன்ரர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அராலி மத்தி, குட்டி கடை (ஆஸ்பத்திரிக்கு அருகில்).

(65441)

### பிறிமா குஞ்சுகள்

06-05-99 வியாழன் பிறிமா புறொயிலர் குஞ்சுகளும் பிறிமா சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், பிறிமா சேவல் குஞ்சுகளும் பதிவு செய்தவர்களுக்கு மாலை 4 மணிக்கு வழங்கப்படும், தொடர்பு: வை. சிவகுமார், 461, நாவலர் வீதி. அத்தியடிச்சந்தி, யாழ்ப்பாணம்.

(65449)

பருத்தித்துறை மறைக்கோட்டத்தினரால் நடத்தப்படும்

## யூபிலி 2000
## மாபெரும் கண்காட்சி

### நிகழ்ச்சிகள்

- ஓவியக்கண்காட்சி
- பொம்மலாட்டம்
- வீடியோ படக்காட்சி
- இன்னிசை கானங்கள்
- நாடகம்
- வினா - விடைப்போட்டிகள்

**இடம்:** பருத்தித்துறை புனித தோமையார் பெண்கள் பாடசாலை

**காலம்:** 08, 09 மே 1999

**நேரம்:** காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

கண்டு களிப்பீர் — யூபிலி ஆண்டு பற்றிய அறிவைப் பெறுவீர்!

- மறைக்கோட்ட முதல்வர்

(65467)

## நன்றி செலுத்தும் ஆராதனை



## செல்வி ஹன்னா லார்சன்

சுவீடன் தேசத்தைச் சேர்ந்தவரும் கல்வாரிச் சபை, ஏலிம் சிறுவர் இல்லம் ஆகியவற்றின் ஸ்தாபகருமாகிய செல்வி ஹன்னா லார்சன் அம்மையார் அவர்கள் 24-04-99 அன்று மகிமைக்குள் அழைக்கப்பட்டு விட்டார். 07-05-99 அன்று அவரது நல்லடக்க ஆராதனை சுவீடனில் நடைபெறவுள்ளது. அன்று காலை 10.00 மணிக்கு இல. 89, பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயத்தில் அவர்களுடைய வாழ்வுக்கும், மிஷனரி ஊழியத்துக்கும் நன்றி செலுத்தும் ஆராதனை நடைபெறும் எனவும் அவ்வாராதனைக்கு சகலரையும் சமுகம் தருமாறும் அழைக்கின்றோம்.

**கல்வாரி குடும்பத்தினர்**

இல. 89, பிறவுண் வீதி,
கொக்குவில்,

(65464)

விராட் விஸ்வப் பிரஹ்மனே நம

# நினைவஞ்சலி

## முதலாம் ஆண்டு



அமரர்
**தம்பிஐயா பாலகிருஷ்ணன்**
(உரிமையாளர், பாலகிருஷ்ணா ஆபரணமாளிகை)

**உதயம்:** 23-10-1930 **அஸ்தமனம்:** 12-06-1998

## மூன்றாம் ஆண்டு



திருமதி
**யோகேஸ்வரி பாலகிருஷ்ணன்**

**உதயம்:** 05-05-1940 **அஸ்தமனம்:** 09-05-1996

அன்பின் திருவுருவாய் பாசமிகு தந்தை, தாயாய்
நல்வழி காட்டிய எம் தெய்வங்களே
என்றும் எம் நெஞ்சங்கள் — உங்கள்
நினைவுகளுடன் காத்திருக்கின்றன......

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பாலகிருஷ்ணா ஆபரண மாளிகை,
86, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.

அபிநயா பதிப்பகம்,
65/1, நாயன்மார் வீதி,
நல்லூர்.

(65465)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒதுக்கிய நிதி கிடைக்கவில்லை; வீதி திருத்தும் வேலைகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 6

வடபகுதி மீள்குடியேற்ற அதிகார சபையின் நிதியுதவி முழுமையாகக் கிடைக்கும் என எதிர்பார்த்துத் தம்மால் ஆரம்பிக்கப்பட்ட வீதி திருத்தும் பணிகளைப் போதிய நிதி வழங்கப்படாமையால் இடை நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன

வடமாகாண மீள் குடியேற்ற அதிகாரசபை குடா நாட்டின் பிரதான வீதிகள் பலவற்றின் திருத்த வேலைகளுக்கு கடந்த வருடம் நிதியுதவி வழங்கும் என அறிவித்ததைத் தொடர்ந்து தம்மால் கேள்வி அறிவித்தல்கள் கோரப்பட்டு ஒப்பந்தகாரர்கள் மூலம் வீதி திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும்—

எனினும் முன்பு கூறப்பட்டது போன்று முழுமையான நிதி கிடைக்கப் பெறாமையால் பல வீதிகளைத் திருத்தும் வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதாகவும்—

இன்னும் சில வீதிகள் திருத்தப்பட்டும் ஒப்பந்தகாரர்களுக்கு திருத்த வேலைகளுக்குரிய நிதியைக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் ஒப்பந்தகாரர்கள் தமது அலுவலகத்துக்கு நாளாந்தம் வந்து திரியவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும்—

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை—

இந்த வருடத்துக்கான நிதி உதவி வழங்குவது பற்றி வடபகுதி மீள் குடியேற்ற அதிகாரசபை இதுவரை எந்த அறிவித்தலையும் தமக்கு வழங்கவில்லை எனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

## மானிப்பாயில் பல வீதிகள் திருத்தப்படவில்லை

வலிகாமம் தெற்கு, மே 6

மானிப்பாய்ப் பகுதியில் உள்ள அநேக வீதிகள் நெடுங்காலமாக திருத்தப்படாதிருப்பதால் பொதுமக்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாயில் இருந்து இணுவில் செல்லும் வீதி, திருத்தம் செய்வதற்கென கடந்த வருடம் கற்கள் பறிக்கப்பட்டிருந்தபோதிலும் இதுவரை அந்த வீதி திருத்தம் செய்யப்படவில்லை.

வீதியில் குவிக்கப்பட்டுள்ள கற்கள் சிதறுண்டு வீதியில் பரவிக் கிடப்பதால் பலவிபத்துக்கள் ஏற்படுகின்றன.

பொதுமக்கள் இவ்வீதியைக் கூடுதலாகப் பாவிப்பதனால் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் போன்றவற்றின் விபத்துக்கள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன.

மானிப்பாயில் உள்ள முதலியார் மகேசன் வீதியில் கிடங்கும் பள்ளமும் நிறைந்து காணப்படுகின்றது.

விசாலமான குழிகள் பலவும் இவ்வீதியில் காணப்படுவதால் வாகனங்களும் பழுதடைகின்றன.

மானிப்பாய் மத்திய பொதுச்சந்தைக்கு தென்புறமாகச் செல்லும் பாதையும் நீண்டகாலம் திருத்தம் செய்யப்படவில்லை.

உச்சியோடை வீதி, ராசகாரியர் வீதி, மெமோறியல் வீதி, செக்காலை வீதி என்பனவும் நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாது காணப்படுகின்றன. (ஐ-152)

## ஜீ. சீ. ஈ. சாதாரண பரீட்சை முடிவுகளை மீளாய்வுசெய்யலாம்

வலிகாமம் தெற்கு, மே 6

கடந்த வருடம் நடைபெற்ற ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை மீள் பரிசீலனை செய்ய விரும்பும் பரீட்சார்த்திகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு பாடத்துக்கு 75 ரூபா வீதம் செலுத்தி மீள் பரிசீலனை செய்ய முடியுமெனவும், மீள் பரிசீலனைக்கான விண்ணப்பங்களை இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம், 'பரீட்சை ஆணையாளர், மதிப்பீட்டுக்கிளை, பரீட்சைத்திணைக்களம். மலே வீதி, கொழும்பு- 2' என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறும் பரீட்சை ஆணையாளர் ஏ. எம். ஆர். பி. அமரக்கோன் அறிவித்துள்ளார். (ஐ-152)

## விவசாயப் பயிற்சிக்கு மாணவர்கள் சேர்ப்பு

வலிகாமம் தெற்கு, மே 6

மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி நிறுவனம் இலவச விவசாயப் பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்களைக்கோரிஉள்ளது.

விவசாயத்தை சுயதொழிலாக மேற்கொள்ள விரும்பும் அல்லது தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ள விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி ஒருவருட காலத்துக்குரியதாகும்.

விவசாய மூலதத்துவம்: பயிரியல், மிருகபரிபாலனம்' பூங்கனியியல், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் (ஆண்களுக்கு), மனைப்பொருளியல் (பெண்களுக்கு), ஆங்கிலம் ஆகிய பாடங்கள் விவசாய டிப்ளோமாப்பயிற்சியில் போதிக்கப்படும்.

ஜீ. சீ. ஈ. சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்த 17 – 25 வயதுக்குட்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

நான்கு மாதங்கள் நடத்தப்படும் குறுகிய கால விவசாய பயிற்சியில். விவசாய மூலதத்துவம். பயிரியல், பூங்கனியியல், மிருகபரிபாலனம் போன்றவற்றில் அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப்படும்.

இந்நெறிக்கு ஜீ. சீ. ஈ. சாதாரணம் சித்தியடைந்த 16 - 26 வயதுக்கிடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

பயிற்சி நெறிகள் நடைபெறும் காலங்களுக்கு பயிற்சியாளர்களுக்கு உதவுதொகைகள் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறிகளில் சேர விரும்புவோர் விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு மே மாதம் 10 ஆம் திகதியும் குறுகியகால விவசாயப் பயிற்சி நெறிக்கு மே மாதம் 11 ஆம் திகதியும் காலை ஒன்பது மணிக்கு. மேற்படி நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு வருகை தருமாறு நிறுவன அதிபர் அறிவித்துள்ளார்.

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்விப்பத்திரங்கள், நற்சான்றிதழ்களுடன் வருகை தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-152)

## உடுப்பிட்டி கூட்டுறவுச்சங்க கிளைகளுக்குப் புதிய கட்டடங்கள்

யாழ்ப்பாணம், மே, 6

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கரணவாய், உடுப்பிட்டி மத்தி ஆகிய இருகிளைச்சங்கங்களுக்கும், புதிய கட்டடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய கட்டடம் அமைப்பதற்கான நிதியை, சங்கநிதியில் இருந்து வழங்குவது என நிர்வாகசபை எடுத்த தீர்மானத்தை பொதுச்சபை அங்கீகரித்துள்ளது.

கரணவாய் கிளைச்சங்க புதிய கட்டடத்திற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் —

உடுப்பிட்டி மத்தி கிளைச் சங்கத்திற்கு 3 லட்சம் ரூபாவும் — ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சங்க வாகனங்களுக்கான தரிப்பிடம் ஒன்றைப் புதிதாக அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன (ஐ-15

## வைத்திய அதிகாரி இன்றி அனலைதீவு ஆஸ்பத்திரி

திருநெல்வேலி, மே 6

அனலைதீவு அரசினர் வைத்தியசாலை கடந்த இரு மாதகாலமாக வைத்திய அதிகாரி எவரும் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கு நிலவிவரும் பற்றாக்குறையினால் இவ் வைத்தியசாலைக்கு நிரந்தர டாக்டர் ஒருவரை நியமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மீள் பதவி நியமனம் பெறுவதற்கு அனுமதி பெற்ற சில பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் கூட அனலைதீவு அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று கடமையாற்ற முன்வரவில்லை என்று அறியவருகிறது.

இவ் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று யாழ். சுகாதார திணைக்களம் அதன் தலைமையகத்திடம் கேட்டுள்ளது. (ஐ-135)

## வீதி அபி. அதிகார சபையில் பொறியியலாளர் பதவி நீண்டகாலமாகவெற்றிடம்

யாழ்ப்பாணம், மே 6

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்குக்கான பிரதம பொறியியலாளர் பதவி இரண்டு வருடங்களுக்கு மேலாக வெற்றிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்வின் பின்னர் மேற்படி பதவி வகித்த பொறியியலாளர் ஒருவர் கொழும்பிலுள்ள மேற்படி சபையின் தலைமைக் காரியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்த வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம பொறியியலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டாமையால் தம்மால் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பிரதம பொறியியலாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

## பாடசாலைப் பிரிவுக்குரிய 3 அலுவலகங்கள் திறப்பு

வலிகாமம் தெற்கு, மே 6

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் அமைந்துள்ள மூன்று பாடசாலைப் பிரிவுகளும் தத்தம் இடங்களில் இயங்க ஆரம்பித்துள்ளன.

இம் மூன்று பிரிவுகளுக்கும் பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளர்களும், அவற்றுக்குத் தேவையான ஆளணியினரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பிரிவுக்கான அலுவலகம் வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். அருளானந்தன் தலைமையில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

நல்லூர்ப்பிரிவு பாடசாலைகளுக்கான அலுவலகம் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். காங்கேயன் தலைமையில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கோப்பாய்ப் பிரிவுப் பாடசாலைகளுக்குரிய அலுவலகம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது. இக்காரியாலயத்துக்கு பொறுப்பாக உதவிக் கல்விப்பணிப்பாளர் கே. சிவஞானசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி அலுவலகங்கள் மூன்றையும் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் நா. தணிகாசலம் பிள்ளை சம்பிரயதாய பூர்வமாகத் திறந்துவைத்தார். (ஐ-152)

## செய்திச் சாரம்

### சிகிச்சை

கடந்த வருடம் ஜனவரி முதல் டிசெம்பர் வரையிலான 12 மாத காலப் பகுதியில், பருத்தித்துறை ஆத்தியடி மத்திய மருந்தகத்தில் சுமார் 40 ஆயிரத்து 498 நோயளார் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 17 பேர் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (க-109)

### காற்றினால் மரங்கள் முறிவு

புன்னாலைக் கட்டுவன், மே 6

தற்போது வீசும் கடும் காற்றினால் புன்னாலைக் கட்டுவன், ஈவினைப் பகுதிகளில் வாழை மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

இதேவேளை இராணுவ நடவடிக்கையின் போது ஷெல் வீச்சினால் பாதிக்கப்பட்ட மரங்களும் இப்பகுதிகளில் முறிந்து வீழ்ந்துள்ளன. (க-133)

### சித்திபெற்ற மாணவருக்கு பணப் பரிசு

வலி. தென்மேற்கு, மே 6

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவமாணவியர்களுக்கு கல்லூரி அதிபர் ஜி இராஜநாயகம் பணப்பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்.

கல்லூரி ஒட்லி மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற உசாநந்தினி ஸ்ரீகணேசலிங்கம் (8 டி) விசேட பணப் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை —

யாழ். மாவட்டத்தில் ஐந்துடி' சித்தி பெற்றவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் இலவசமாகக் கல்வி பயில விசேட புலமைப்பரிசில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-185)

### வீதி திருத்தம்

பருத்தித்துறை, மே 6

மேலைப் புலோலி கார்த்திகேயர் வீதி திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது. பருத்தித்துறை பிரதேச சபை இந்தத் திருத்த வேலைகளை மேற்கொண்டு வருகிறது. (க-118)

### மாணவனுக்கு தங்கப்பதக்கம்

வலிகாமம் தெற்கு, மே 6

லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட சமாதானத்துக்கான சுவரொட்டிப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இணுவில் மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவன் பாலசுப்பிரமணியம் சுரேஸ் கண்ணா தங்கப்பதக்கத்தைப் பரிசாகப் பெற்றுள்ளார்.

நிப்போன் சர்வதேச தொலைக்காட்சி நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட சர்வதேச சிறுவர் சித்திரக் கண்காட்சிக்கான போட்டியிலும் அதே பாடசாலையைச் சேர்ந்த குணசிங்கம் றஜீவன் வெள்ளிப் பதக்கத்தையும் செகராசபிள்ளை செந்தூரன், பாலசிங்கம் ஞானேந்திரன் ஆகியோர் வெண்கலப்பதக்கத்தையும் வென்றெடுத்துள்ளனர். (ஐ—152)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக ஊழியர் பிரச்சினை;
# துணைவேந்தர்கள் கூடி ஆராய்வர்

யாழ்ப்பாணம், மே 6

பல்கலைக்கழக ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் ஊடாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகியவற்றிடம் நேரடியாக வலியுறுத்தப்போவதாக யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை யாழ் பல்கலைக்கழக போதனை சரா ஊழியர்களிடம் உறுதிமொழி வழங்கினார்.

சம்பள உயர்வு, சம்பள முரண்பாடு, ஒய்வூதியம், வீடமைப்பு, கடன் வசதி போன்றவற்றிற்கு விரைவில் தீர்வுகாணுமாறு கோரி யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவர்கள் ஏனைய சங்கங்களுடன் இணைந்து கடந்த 27ஆம்திகதி தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

நேற்று முன்தினம் எட்டாவது நாளாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் துணைவேந்தரின் வாசஸ்தலத்திற்குச் சென்று தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கோரி மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

ஊழியர்கள் சார்பில் ஊழியர் சங்கத் தலைவர் எஸ். கலாதரன் இந்த மகஜரைத் துணைவேந்தரிடம் கையளித்தார்.

இம் மகஜரைப் பெற்றுக்கொண்டு ஊழியர் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட உறுதிமொழியை வழங்கினார்.

பல்கலைக்கழக ஊழியர்களின் பிரச்சினை தொடர்பாக அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கச் சம்மேளனத்துடன் பேச்சுநடத்தி ஓர் இணக்கத்தைக் காணுமாறும் சம்பந்தப்பட்டவர்களை வலியுறுத்தப் போவதாகவும் அவர் ஊழியர்களிடம் தெரிவித்தார்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களின் கூட்டம் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அவர் கொழும்பு செல்லவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் மேற்படி ஊழியர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த 450 பேர் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். தமது பிரச்சினைகளுக்குதீர்வு காணப்படும் வரை போராட்டம் தொடரும் என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

இந்த ஊழியர்களின் போராட்டத்துக்கு வங்கி ஊழியர் சங்கம், அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம், ஆசிரியர் சங்கங்கள் உட்பட பல தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நேரில் சென்று தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். (ஐ-5)

### பாஷையூர் சந்தையில்
## மரக்கறி வியாபாரத்துக்கு இடம் ஒதுக்கப்படவில்லை

அரியாலை, மே 6

பாஷையூர் பகுதியில் வீதியோரங்களில் வைத்தே வியாபாரிகள் மரக்கறி வகைகளை விற்பனை செய்து வருகின்றனர்.

பாஷையூர் சந்தையில் உள்ள இரு கட்டடங்களும் மீன் விற்பனைக்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதால் மரக்கறிவகைகளை வியாபாரிகள் விற்பனை செய்வதற்கு இடம் இன்றிச் சிரமப்படுகின்றனர். (ஐ-17)

## வீடியோ நாடாக்களை அனுப்புதல் நிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ். குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு வீடியோ நாடாக்களை அனுப்புவது தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

வீடியோ நாடாக்களை பரிசோதிப்பதற்குப் பயன்படும் யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் உள்ள — 'வீடியோ டெக்' பழுதடைந்தமையே இதற்குக் காரணம் என்று அவர் தெரிவித்தார்.

அந்த வீடியோ டெக் திருத்தப்பட்டதும் வீடியோ நாடாக்களை ஏற்பது குறித்து அறிவிக்கப்படும் எனவும் பிரதம தபாலதிபர் தெரிவித்தார். (ஐ-7)

## 93 பொதிகளில் தபால்கள் வந்தன

கோண்டாவில், மே 6

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த்தபால்கள் அடங்கிய 93 தபாற்பொதிகள் நேற்றையதினம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் யாழ் எடுத்துவரப்பட்டன.

—குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சேகரிக்கப்பட்ட வெளியூர் தபால்கள் அடங்கிய 35 தபாற்பொதிகள் இதே கப்பல் மூலம் நேற்றையதினம் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்றைய தினம் வந்து சேர்ந்த தபாற்பொதிகள் யாவும் இன்று வியாழக்கிழமை முதல் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் எனவும் யாழ் பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார். [ஐ-7ரி]

## எழுதுநர்கள் நியமனம்

திருநெல்வேலி, மே 6

யாழ். சுகாதாரசேவைபிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு திருகோணமலையிலுள்ள வடக்கு—கிழக்கு மாகாண செயலகத்தினால் ஆறு புதிய எழுதுநர்கள் இம் மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 4 பேர் தமது கடமையைப் பொறுப் பேற்றுள்ளதாகப் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ். மகேந்திரன் தெரிவித்தார்.

களஞ்சியப் பொறுப்பாளர் ஒருவரும், கணக்குப் பதிவாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம்

காரைநகர், மே 6

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் இருவர் பட்டதாரி ஆசிரியர்கள் கடந்த முதலாம் திகதி நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ—73)

## சாவகச்சேரி நகரசபைக்கு 35 எழுதுநர்கள் நியமனம்

தென்மராட்சி, மே 6

சாவகச்சேரி நகரசபையில் 35 எழுதுநர்களும், இரண்டு தமிழ் சுருக்கெழுத்தாளர்களும், இரண்டு களஞ்சியப் பொறுப்பாளர்களும் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையான எழுதுநர்கள் கடமையேற்றுள்ளதால் மாநகரசபை அலுவலகங்களில் பெரும் இடநெருக்கடி எற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு — கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளரினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## வீதியைத் திருத்தக்கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ். மாநகர சபைப்பகுதியில் நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாமலிருக்கும் சிவப்பிரகாசம் வீதி, இராமநாதன் வீதி, பிறவுண் வீதி போன்றவீதிகளைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கையை எடுக்குமாறு கோரி சிவப்பிரகாசம் வீதி மக்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

இந்த மூன்று வீதிகளையும் திருத்தம் செய்யுமாறு யாழ். மாநகரஆணையாளர், யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரையும் திருத்தம் செய்யப்படவில்லை.

யாழ். நகரப் படைத்தளபதியாக இருந்த பிரிகேடியர் சுசந்த மென்டிஸ் இந்த வீதிகளைத் திருத்தம் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்து ஏழு மாதங்கள் கடந்து விட்ட போதும் சிறிய திருத்தம் கூட செய்யப்படவில்லை.

இதேவேளை அரச அதிகாரிகள் வசிக்கும் இடங்களிலுள்ள முக்கியத்துவமற்ற வீதிகள் விசேடமாக பொது மக்கள் மற்றும் வாகனங்கள் பயணம் செய்யாத பல வீதிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. (இவ் வீதிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன)

போக்குவரத்துக்கு முக்கியத்துவம் மிக்க வீதிகள் திருத்தம் செய்யப்படாமல் அதிகாரிகளின் வீட்டிற்கு அருகிலுள்ள வீதிகள் திருத்தம் செய்யப்பட்டது தொடர்பாக விசாரணை ஒன்றை நடத்தி உண்மை நிலையைக் கண்டறியுமாறு வேண்டுகின்றோம்.

போக்குவரத்து முக்கியத்துவமிக்க குறிப்பிடப்பட்ட வீதிகள் திருத்தம் செய்யப்படாமையினால் வாகனங்கள் அனைத்தும் குச்சு ஒழுங்கைகளுக்கு ஊடாகச் செல்வதினால் அந்த ஒழுங்கைகளுக்குள் செல்லும் பாடசாலைச் சிறுவர்கள் விபத்தில் சிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நீண்ட காலமாக வீதிகள் திருத்தம் செய்யப்படாமலிருப்பதனால் வீதிகள் புழுதி நிறைந்து காணப்படுகின்றன இந்த புழுதி வாகனம் செல்லும் வேளைகளில் மேலே கிளம்பி அருகிலுள்ள வீடுகளுக்குள் செல்வதால் இதற்கு அருகில் வசிக்கும் மக்களுக்கு சுகாதாரக்கேடு உண்டாகிறது.

ஆகவே குறிப்பிடப்பட்ட மூன்று வீதிகளையும் திருத்தம் செய்வதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)


உ
சிவமயம்

சைவ மாநாடு

(புண்ணிய நாச்சி தரும அறக்கட்டளை)

இடம்: நாவலர் ஆச்சிரம மண்டபம் நீராவியடி - யாழ்ப்பாணம்

காலம்: 7, 8, 9 மே 1999
வெள்ளி, சனி, ஞாயிறு

நேரம்: தினமும் மு. ப. 8-30 — 12-30 மணி
பி. ப. 2-30 — 6-30 மணி

சைவ அறிஞர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்
ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்கள் — ஆசிரிய மாணவர்கள்,
கல்லூரி ஆசிரியர்கள் — மாணவர்கள்
ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

★ சைவாபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

யாழ்ப்பாணம். (65459)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் முத்து இரத்தினம்

தோற்றம் 1919—07—24
மறைவு 1998—04—17

ஆண்டு ஒன்று சென்றாலும் அண்ணா! உங்கள் அன்பு முகம் எங்கள் கண்களில் பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது: எம் அனைவருக்கும் அன்பால் வழிகாட்டிய அன்புத் தெய்வமே எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் அகலாது அண்ணா!

தங்கள் பிரிவால் துயருறும்
அன்புச்சகோதரி, மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

'இரத்தினமஹால்,
பிரதானவீதி, சங்கானை. (65460)

# உதயன்

## தாயின் குரல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவர்களுக்கான பற்றாக் குறை இன்னும் நீங்கவில்லை; 20 சதவீதமான வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை உள்ளதாகவும் அதனை நீக்குமாறும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு சுகாதார அமைச்சரைக் கேட்டிருக்கிறது. அந்த அளவுக்குச் சம்பந்தப்பட்டவர்களின் கரிசனை கட்டறுந்து போயிற்று!

1990 ஆம் ஆண்டின் பின்னர் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் மருத்துவர்களுக்கான பற்றாக் குறை தொடர்கதையாக நீளுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருபது வருடங்களுக்கு முன்னர் மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்ட போது, இங்கேயே பயின்ற தமது பிள்ளைகள் தமக்குச் சிகிச்சை அளிப்பார்கள் என்று மக்கள் மகிழ்ந்தனர்; அந்த வகையில் பலர் தமது காணிகளை மருத்துவபீடம் கட்டுவதற்காகக் குறைந்த விலையில் விற்றனர்.

யாழ். மருத்துவ பீடத்தில் பயின்றவர்கள் மண் பற்றுடன். மக்கள் பற்றுடன், இங்கேயே சேவை செய்யச் சித்தமுடையவர்களாய் இருந்திருப்பின், வடக்கின் மிகப்பெரிய ஆஸ்பத்திரியான யாழ் போதனா வைத்திய சாலைக்கு இன்றைய நிலை நேர்ந்திருக்காது.

இந்தப் பிரதேசத்து மக்களின் பணத்தில், இந்தப் பிரதேச நோயாளிகளின் உடம்புகளில் படித்த இந்த மண்ணின் சொந்த மைந்தர்கள், செய்நன்றி கொன்றவர்களாகி விட்டனர்!

போதிய வைத்திய நிபுணர்கள் இல்லாமையால் புதிதாகப் பட்டம் பெறுவோரில் 20 சதவீதமானோர் மட்டுமே இங்கு உள்ளகப் பயிற்சியைப் பெறக்கூடிய பரிதாப நிலை

தாய் பசித்திருக்கக் காசிக்குப் போய் தானம் செய்யும் மகனைப் போல, யாழ் மருத்துவ பீடத்தில் பயின்று டாக்டர்களானவர்களில் 99 சதவீதமானோரும் யாழ் ஆஸ்பத்திரி பசித்திருக்க அக்கரைச் சீமைகளில் ''வைத்திய சேவை'' செய்து பணம் சம்பாதிக்கிறார்கள்.

அந்த நன்றி கெட்டவர்களோடு ஒப்பிடுகையில் — பல நெருக்கடிகளையும் கஷ்டங்களையும் வசதிக் குறைவுகளையும் அனுபவித்துக் கொண்டு அக்கரை மோகமின்றி இங்கேயே பணிபுரியும் மருத்துவர்கள் உண்மையிலேயே நோயாளரின் தெய்வங்கள். அவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள் மட்டுமல்லர்; வணக்கத்துக்கும் உரியவர்களாவர்.

வெளிநாடுகளில் பணிபுரிந்து விட்டு தமது மக்களுக்குச் சேவை செய்ய வந்துள்ள மருத்துவர்கள் இன்னும் பல மடங்கு போற்றுதலுக்குரியவர்கள். இவர்களின் முன்மாதிரியை, பெருந்தன்மையைப் பின்பற்றியாவது யாழ்ப்பாணத்து மருத்துவர்கள் இங்கு வரக்கூடாதா? உங்களை தாலாட்டிச் சீராட்டி, பாராட்டி வளர்த்து விட்ட யாழ். மண்ணை மறவாதீர்கள். தாயின் குரல் கேட்டு வாருங்கள் என்று மக்கள் சார்பில் விநயமாக வேண்டுகிறோம்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் நலிந்துபோன மலசல கூட நாகரிகம்!

வட மாகாணத்தில் ஒரே ஒரு பிரசித்திபெற்ற நோய் மாற்றும் கோயில் — யாழ். போதனா வைத்தியசாலை.

இதன் ஆதி மூலம்—மலசல கூடம்.

இந்த ஆதி மூலத்தின் நிலைமை என்ன?

நாகரிகம் வளர்ந்து — விஞ்ஞானம்விரிந்து—கம்பியூட்டர் கொழுந்துவிட்ட வேளையிலும். மலசல கூடம் மணம் வீசும் மர்மம் என்ன?

நாட்டு நிலைமை என்று கூற முடியுமா?

அப்படியாயின் யுத்தகாலத்திற்கு முன்பு நிலைமை எப்படி? இதே நிலைமைதான்.

காரணம் யார்?

நோயாளியா? பொது மக்களா? வைத்தியசாலை நிர்வாகமா? அரசாங்கமா? எல்லோருமா?

### வைத்தியசாலை மலசல கூடம்

நோயாளிகளின் குரல் இது: மருத்துவமனையா! மலசல கூடத்தை நினைத்தால்நோய் அதிகரிக்கும்போல் இருக்கிறது. கடவுளே! ஆஸ்பத்திரியில் படுக்காமல் என்னைக் கொண்டுபோ!

1. 90 சதவீதத்துக்கு மேற்பட்ட மலகூடங்கள் (சலகூடம் என்று தனியாக இல்லை) நோயாளியோ, அவரின் உதவியாளரோ, பார்வையாளர்களோ உள்ளே செல்ல முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசுகிறது.

2. சில மல கூட பீங்கான் குழியில் மலம் நிறைந்துள்ளது.

3. சில பாவனையாளர் நீர் ஊற்றாமல் உள்ளது.

4. சில மலகூடத்தின் மேல் மாடியில் உள்ள மல கூடத்திலிருந்து தண்ணீர் தலையில் வடிகிறது.

5. வைப்பானில் மலம் வெளியேறாமல் உள்ளது.

6. பல சாதாரண நிலையிலுள்ள நோயாளர் சலம் விடுவதற்கு புறம்பான இடம் இல்லாத காரணத்துடன், பழக்க வழக்க சோம்பேறித்தனத்தையும் சேர்த்துபோக்குவரத்து வழியில் சலம் கழிக்கிறார்கள்.

7. மலசல கூடக்குழிகள் போதியளவு சுத்திகரிப்புச் செய்யாமல் காவி படிந்து நிறம்மாறி துர்நாற்றம் வீசுகிறது.

**எஸ்.ஈ.லிங்கம்**

8. மலசல கூடச் சுவர் மாபிள் பதிக்கப்பட்டுள்ளது. நிலத்தில் விசேட கல் பதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவற்றின் நிறம், மணம், அழுக்கு வர்ணிக்கமுடியாதவை.

9. இவற்றைவிட வெளி நோயாளர் பகுதி — கிளினிக் போன்றவற்றுக்கு பல நூற்றுக் கணக்கில் [ஆயிரம் இருக்கலாம்] வெளியிடங்களில் இருந்துவரும் நோயாளி, உதவியாளருக்கு மலசல கூட வசதி இருக்கிறதா? எத்தனை எங்கே?

10. உதாரணமாக 27 ஆம் வார்ட்டில் உள்ள மலசல கூடத்தில் தண்ணீர் தொட்டி முடக்கின் கீழ்ப் பகுதியில் உள்ள கான் (வாய்க்கால்) சாக்கடை போல் உள்ளது.

> **யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றவர் தமது அனுபவத்தை, அங்குள்ள குறைபாடுகளை இங்கு துலாம்பரமாக எழுதியுள்ளார். அவர் தெரிவிப்பது போல சம்பந்தப்பட்ட எல்லோரும் இது விடயத்தில் தமது கவனத்தைச் செலுத்தி சுகாதாரம் பேண உழைக்க வேண்டும்**

### இவற்றிற்கு யார் பொறுப்பாளி? என்ன காரணம்

★ பொதுமக்கள்— நோயாளி.

★ வைத்தியசாலை நிர்வாகம்.

★ அரசாங்கம்.

### அ. பொதுமக்கள் — நோயாளிகள்

இவர்கள் நாகரிகமற்ற முறையில் மலசலம் கழிக்கிறார்கள். மற்றவர்களைப் பற்றி சிந்திப்பதில்லை. சிலர் ஒரு எவர் சில்வர்பேணியளவு தண்ணீருடன் தமது சுத்திகரிப்பை முடிக்கிறார்கள், போதியளவு தண்ணீர் பாவிப்பதில்லை. அவசரமோ, அவசரமில்லையோபோகின்ற பாதையில் மலசலம்கழிக்கிறார்கள். ஒரு படுக்கையில் உள்ள நோயாளியுடன் நிற்பவர் நோயாளி வைப்பானில் கழித்த மல, சலத்தை வெளியேற்றி வைப்பானை சுத்தம் செய்து வைப்பதில்லை.

குறிப்பு: தண்ணீர் வரும் பைப்புக்கள் பல, சில பழுதடைந்து குறிப்பிட்ட நேரத்திற்கு வரும் தண்ணீர் கட்டுப்பாடில்லாமல் வெளியே சிந்துகிறது.

### ஆ வைத்தியசாலை நிர்வாகம்

● பெருமளவு கண்காணிப்பு இவர்களிடம் உள்ளது — ஆனால் இல்லை.

● மலசல கூடசுத்திகரிப்பு சரியாக—முறையாக நடப்பதில்லை (கண்துடைப்பு, நுனிப்புல் மேய்தல்)

● சுத்திகரிப்பாளர்களுக்கு போதியளவ உபகரணம். கிருமிநாசனி ஹார்ப்பிக் போறன்வைவழங்க வில்லை?

உதாரணமாக, மலசல கூடத்தை கூட்டுமாறால் கழுவும் பொழுது ஈர்க்கு முறிந்து மலம் போகும் குழியை தடை செய்கிறது. 27 ஆம் வார்ட்டில் பார்க்கலாம்.

● சலம் கழிப்பதற்கு தனியான இடம் இல்லை.

● நோயாளர் — உதவியாளர் எண்ணிக்கைக்கு ஏற்ப மலசல கூடம் இல்லை.

● ஒவ்வொரு வார்ட்டிற்கும் மலசலகூடத்திற்கு முழுநேர ஊழியர் இல்லை.

● நோயாளர் — உதவியாளர் இவர்களுக்கு மலசல கூட பாவனை முறைபற்றி கட்டாயப்பணிப்புரைவழங்குவதில்லை.

● ஒவ்வொரு வார்ட்டிலும் உள்ள மலசல கூடத்தை மருத்துவமனை நிர்வாகம்— பொறுப்பாளர் — தாதியர் — வைத்தியர்கள் உட்பட அனைவரும் அடிக்கடி பார்வையிட வேண்டும்.

குறிப்பு:- தொழில் ரீதியை மட்டும் கருத்தில் கொள்ளாமல், அன்பு, சேவை, மனிதாபிமானம், பெரும்தொண்டு என்ற அடிப்படையில் செயற்பட்டால் மிகச் சுலபமாக செயற்படுத்தலாம் மருத்துவமனை ஊழியர்கள் தொழிலுடன் அன்பைக் கலந்து பணி புரிந்தால், இதைவிட சிறந்ததானம்.— தர்மம் — யாகம் — பூசை செய்யவேண்டிய அவசியமில்லை.

> **என்னைக் கொண்டு போ!**
>
> ''மருத்துவ மனையா! மலசலகூடத்தை நினைத்தால் போதும் நோய் அதிகரிக்கும் போல் இருக்கிறது. கடவுளே! ஆஸ்பத்திரியில் படுக்காமல் என்னைக் கொண்டு போ!''

### இ. அரசாங்கம்

ஒட்டு மொத்தப் பொறுப்பு இவர்களிடம் உள்ளது. சுகாதாரத்தைப் பற்றி வெளியில் போதனை செய்யும் முன்பு வைத்தியசாலையில் பூரண சுகாதாரத்பாதுகாப்பு திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். (ஒரு நோயாளி மருத்துவ மனையை விட்டுவெளியேறியவுடன் அவர் படுத்த கட்டில் 95% துப்புரவு செய்யப்படுவதில்லை.) உதாரணமாக, கட்டில் படுக்கைவிரிப்பை (பெற்சீற்) சில குறிப்பிட்ட நாள்களில் ஒரேயடியாய் மாற்றுவார்களே அன்றி ஒரு நோயாளி வெளியேறியவுடன், மற்ற நோயாளிக்குக் கொடுக்கும் பொழுது மாற்றுவதில்லை.)




நாகரிகம் பல மீற்றர் வேகத்தில் முன்னேறியும் நாம் இவ்வளவு கீழ் நிலையில் இருப்பது கவலைக்குரியது. இது திருத்தமுடியாதது. மாற்ற முடியாதது. அரசாங்கத்தின் ஒத்துழைப்புப் போதாது என்பதெல்லாம் எமது சோம்பேறித்தனமும், சுயநலமும் நாகரிகமுமற்ற செயலைக்குறிக்கிறது.

நோயாளிகள் மனது வைத்தால் ஆறு மாதத்தில் மாபெரும் முன்னேற்றம் செய்யலாம். இதில் முழுக்க முழுக்க அலட்சியப் போக்கே காரணம்.

### சிந்திக்க வேண்டும்

வடமாகாணம் முழுவதற்கும் பிரசித்தி பெற்ற ஒரேஒரு நோய் மாற்றும் கோயில் யாழ். போதனாவைத்திய சாலை. இதன் மூலஸ்தானம் (மலசலகூடம்) பழுதடைந்துள்ளது.

கும்பாபிஷேகம் செய்ய வேண்டும். இதைவிடப் பெரிய சேவை, பணி உலகில்

[9 ஆம் பக்கம் பார்க்க]

## சாயி சிந்தனை

ஞாபக சக்திக்கும் வயதுக்கும் சம்பந்தம் இல்லை. அது மனத்தின் இயற்கையைப் பொறுத்தது. வயதுக்கு தகுந்தபடி எண்ணங்கள் மறாலாம். வயது என்பது உடலுக்குத் தானே தவிர. உள்ளத்துக்கு அல்ல. உடலைப் புனிதமாக ஆக்கிக் கொள்ள பிறருக்குச் சேவை செய்ய வேண்டும். சேவையின் மூலம் கடவுளின் அன்பைப் பெற வேண்டும். அன்பு எப்போதும் கடவுளுக்கும் பக்தனுக்கும் இடையே உள்ள இருவழிப் பாதை. சைதன்யர் கூறுவார். ''எனக்குத தியானம், பூசை, ஜபம், யோகம் போன்றவை தெரியாது. என்னிடம் இருப்பது அளவு கடந்த பிரேமை மட்டுமே; பக்தனுக்கு இது போதும்'' என்று அவர் சொல்லுவார்.

உன் நினைவாற்றல் உன்னுடைய ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒரு பொருள், ஒரு நிகழ்ச்சியை எவ்வளவு ஆர்வத்துடன் நீ கவனிக்கிறாய் என்பதைப் பொறுத்தது. அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணரிடம் ''கடந்த காலம் முழுவதையும் நீ எப்படி நினைவில் வைத்திருக்கிறாய்?'' என்று வியப்புடன் கேட்டான். பதிலுக்கு கிருஷ்ணர் அர்ஜுனனிடம் ''பத்து ஆண்டுகளுக்கு முன்னால் நீ எங்கிருந்தாய் என்று சொல்ல முடியுமா?'' என்று கேட்டார். அவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. ''நீ சுபத்திரையை எப்போது கலியாணம் செய்து கொண்டாய்? அப்போது என்ன நடந்தது?'' என்று கேட்டார். எல்லாவிவரங்களையும் அர்ஜுனன் ஒன்று விடாமல் சொன்னான்: ''நீசுபத்திரையிடம் நிறைந்த ஆசை வைத்திருக்கிறாய் அதனால் தான் உனக்கு நினைவிருக்கிறது. எதன்மீது உண்மையான பற்று இருக்கிறதோ, அதை நீ மறுக்காமல் நினைவில் வைத்திருப்பாய்'' என்று சொன்னார் கிருஷ்ணர்.

புத்திதான் மனதுக்கு நினைவுகளைக் கொண்டு செல்லும் சாதனம். நல்ல பேருரைகளைக் கேட்கும் போது கவனத்துடன் கேட்க வேண்டும் பிறகு புரந்து கொண்டு மனதில் வைதுத்கொள்ள வேண்டும். அதன் பின் அவற்றின் படி நடைமுறையில் செயற்படுத்த முனைய வேண்டும். இதைத்தான் ஸ்வணம், மனனம், நித்தியாஸனம் என்று குறிப்பிடுகிறோம். வாழ்க்கையில் [illegible] கொண்டால் இந்த மூன்று வழிகளிலும் முயன்று இறைவனை அடையலாம்.

(நன்றி- ஞானபூமி)

> **நாளை**
>
> சித்திரை 24
>
> வெள்ளிக்கிழமை
>
> திதி: ஷஷ்டி
>
> காலை 6.08 வரை.
>
> நட்சத்திரம்: உத்தராடம்
>
> பிற்பகல் 5.00 வரை.
>
> சுபநேரம்: 5.55-7.25
>
> ராகுகாலம்: 10.25-11.55
>
> [பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி]

> **உதய வாக்கு**
>
> ஓர் அழகிய பழமொழி ஞாபகத்தில் இருப்பது பணப்பெட்டியில் ஒரு பொற்காசு இருப்பதற்குச் சமம்.
>
> - ஸ்வீடன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 6

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'மூவர் தமிழ்' என்ற தலைப்பில் இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி. சக்திகிரீவன் சொற்பொழி வாற்றுவார்.

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அறிமுக உரையை இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் சி. முருகேசம் பிள்ளை நிகழ்த்துவார். (க-30-173-109)

## வாசகர் திருமுகம்

# விநோதமான தெரிவுகள்

தற்போது யாழ். குடாநாட்டைப் பொறுத்த வரையில் பதவி வழங்கலில் தனிப்பட்ட செல்வாக்கு களே முதலிடம் பெற்று விளங்குகின்றன. உண்மை யான தகுதிக்குத் தற்போது மதிப்புப் போய்விட்டது. இதற்கு அண்மையில் நடந்த சம்பவம் ஒன்று உதார ணம்.

கடந்த மாதம உதயன் பத்திரிகை மூலமாக யாழ்ப் பாணத்திலுள்ள உயர்கல்வி நிறுவனங்களான பலாலி கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைகளில் நிலவும் விரிவுரையாளர்கள் பதவிக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தமை தெரிந்ததே. தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களும் போய்ச் சேர்ந்தன. நேர்முகத்தேர்வு விரைவில் நடக் கும், கடிதங்கள் வரும் என விண்ணப்பதாரிகள் காத் திருந்தனர்.

பலாலி கலாசாலை கடிதம் அனுப்பியது கோப் பாய் தாக்கு வேண்டிய சிலருக்கு மட்டும் அல்லது ஏற்கனவே பின் கதவால் கலாசாலைக்குள் புகுந்தவர் களுக்கு கடிதங்கள் அனுப்பியது ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியன்று நேர்முகத்தேர்வு நடைபெற்றது தாம் ஏற் கனவே தீர்மானித்தவர்களிற்கும். ''பதவி வழங்கப் பட்டவர்களுக்கும்'' பதவிகள் வழங்கப்பட்டன. தகுதி யான நிலையிலும் பலவருட அனுபவமுடைய, சிறப் புப்பட்டதாரிகள், கல்வி டிப்பிளோமா பெற்றவர்கள் தமக்கும் பதவிகள் கிடைக்கும் என எதிர்பார்த்து ஏமாற்றமும் வெட்கமும் அடைந்தனர். முடிவு ஓர் ஆசிரியருக்கான ஆகக்குறைந்த தகுதி இல்லாதவர் களுக்கே விரிவுரையாளர் பதவிகள் வழங்கப்பட்டுள் ளன இந்தப் ''புனிதமான'' ''நீதியான'' தீர்ப்பினை வழங்கியவர்கள் யார் தெரியுமா? கோப்பாய் பலாலி ஆசிரியகலாசாலை அதிபர்களும் யாழ். வலயம் ஒன் றின் தற்போதைய கல்விப் பணிப்பாளருமாவார்கள்!

ஏற்கனவே விரிவுரையாளர்களை தீர்மானித்திருந் தால் பத்திரிகையில் விளம்பரம் செய்து மற்றவர்களை சிரமத்திற்கும் மனவேதனைக்கும் உட்படுத்தியது ஏன்? நீங்கள் சட்டரீதியாகத் தேர்வு நடத்தித்தான் விரிவு ரையாளர்கள் எடுத்தோம் என்று வெளியில் காட்டு வதற்காக அப்பாவி ஆசிரியர்களை ஏன் பகடைக் காய்களாகப் பயன்படுத்துகிறீர்கள் எனக் கேட்கிறார் கள் விண்ணப்பதாரிகள்!

தகுதியில்லாதவர்கள் விரிவுரையாளர்களாக வந் தால் அவர்களிடம் பயிற்சிபெறும் ஆசிரியர்களின் நிலைதான் என்ன? அவர்கள் எப்படிப் பூரணமான பயிற்சியைப் பெறமுடியும்? அண்மையில் பலாலி ஆசி ரிய கலாசாலைக்கு செல்வாக்கின் மூலம் விரிவுரை யாளராகப் பதவிக்கு வந்தவர் ஆசிரிய மாணவர் களின் பாடசம்பந்தமான கேள்விகளிற்கு பதில் கூற முடியாத நிலையில், கிண்டல்கள் மத்தியில் தனது பழைய பாடசாலைக்குத் திரும்பிச் செல்ல முயற்சிப் பது தெரிய வந்துள்ளது.

செ. செல்வராசா

அரியாலை, யாழ்ப்பாணம்.

# நியாயம் கிடைக்கச் செய்வரா?

நான் ஓர் ஏழைத் தொழிலாளி ஆவேன். எனக்கு தற் போது அறுபது வயதாகிறது. என்னால் கடுமையான தொழில் எதுவும் செய்யமுடியாது. எனது குடும்பத்தில் நானும், எனது மனைவியும் (வீட்டுப்பணி) ஒரு மகனு மாக (14 வயது மாணவன்) மூவர் உள்ளோம். எனது வருமானத்திலேயே எனதுகுடும்பம் சீவியம் செய்கிறது.

எனது குடும்பம் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மையால் முத்திரை, நிவாரண அட்டைபோன்ற அரச உதவிகள் இதுவரைகாலமும் கிடைக்கப்பெற்று வந் தன. ஆனால் தற்சமயம் எனது பகுதிக்கு (1998 ஜூன் மாதத்திற்குப் பின்னர் வந்த) கிராம சேவை உத்தியோகத்தரால் இவ்வுதவிகள் யாவும் எதுவித நியாயமுமின்றி நிறுத்தப்பட்டுள்ளன.

அவரைக் காரணம் கேட்டதற்கு சாக்குப் போக் குச் சொல்லி தட்டிக்கழிக்கிறார். இதில் வேடிக்கை என்னவென்றால், அன்றாடம் வாழ்க்கைக்கே கஷ் டப்படும் எங்களுக்கு நிவாரணம் இல்லை. வெளி நாட்டவர் குடும்பங்களுக்கும், பண வசதி படைத்த வர் குடும்பங்களுக்கும் இவரால் நிவாரணத்துக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. நான் இது தொடர் பாக 30-03-99 இல் உதவி அரச அதிபரோடு தொடர்பு கொண்டபோது அவரும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஏழைகளின் கஷ்டம் கருதி அரசால் வழங்கப் படும் உதவிகள் இடையே நிற்கும் ஒரு சிலரால் சுய இலாபத்திற்காக தடுக்கப்படுவது மிக அநியாய மானது ஆகும். அப்பட்டமான மனித உரிமை மீற லும் ஆகும். எனவே இதில் பொறுப்புடையோர் தலையிட்டு எனது பிரச்சினைக்கு நியாயம் கிடைக் கச் செய்வார்கள் என மிகுந்த நம்பிக்கையுடன் எதிர் பார்க்கிறேன்.

கரவெட்டி தெற்கு.

பாதிக்கப்பட்டவன்.

# ஒலிபெருக்கி சாதனம்

திருநெல்வேலி, மே 6

வடக்குக்-கிழக்குமாகாண சுகாதார அமைச்சின் பணிப் பாளரினால் யாழ்.சுகாதாரத் திணைக்களத்திற்கு மூன்று ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.சுகாதார சேவை பிரதிமாகாணப்பணிப்பாளர் பணிமனையின் சுகாதார பிரசாரப் பிரிவுக்கும், தெல் லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலைக்கும், பருத் தித்துறை ஆதார வைத்திய சாலைக்கும் இந்த ஒலி பெருக்கி சாதனங்கள் விநி யோகம் செய்யப்பட்டுள்ளன.

[ஐ-135]

# தென்மராட்சி வலய மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மே 6

தென்மராட்சி வலயக் கல் விப் பணிமனை மெய்வல்லு நர் போட்டி நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 1 : 15 மணிக்கு தென்மராட்சி வல யக் கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசா தலைமை யில் மட்டுவில் சந்திர புர ஸ்கந்தவரோதய மகா வித்தி யாலயத்தில் நடைபெறவுள் ளது.

இந்த நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க. கந்தசாமி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சாவகச்சேரி இந்துக் கல் லூரி கொடிகாமம் திருநாவுக் கரசு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர் களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.(ஐ-க)

## யாழ். போதனா......

[ஏழாம் பக்கத் தொடர்]

வேறேதும் இல்லை எனலாம்; எத்தனையோ உள்ளங்கள் மகிழ்ச்சியுறும், மனமார வாழ்த்தும் உடனே புறப்படுங் கள் —செயற்படுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று யாழ். போதனா வைத்திய சாலைநிர்வாகத்திடம்பொது மக்கள் வற்புறுத்த வேண் டும்.

குறிப்பு:- யாழ். போதனா வைத்தியசாலைக்குள்ளே — வேறாக— தனியாக— கூடிய எண்ணிக்கை கொண்ட மல சல கூடங்களை உடனடியாக அமைக்க வேண்டும். இதற்கு நிரந்தரமாக இரவு — பகல் ஊழியர்கள் கடமையாற்ற வேண்டும். இதைப் பாவனை செய்வோரிடம் 2 ரூபா கட்ட ணம் அறவிடலாம். இதற்கு பொதுமக்கள், தனியார் நிறு வனங்கள் ஆகியவற்றின் ஆலோசனை ஒத்துழைப்பை நாடலாம்.

ஒவ்வொரு வார்ட்டிலும் மேலதிகமலசலகூடம்அமைக்க வேண்டும். இதேநேரம், யாழ். மாநகரசபை நகர் மத் தியில் மேற்குறிப்பிட்ட முறை யில் பொது மலசலகூடங் களை உடனடியாக அமைக்க வேண்டும்.

### சிந்தனைக்கு

நாகரிகம் என்பது வெளிப் புற செயற்பாடு மட்டுமல்ல. உட்புறச் செயற்பாடே. ஒய் யாரக் கொண்டையிலே தாழம் பூவாம் உள்ளே இருப் பது ஈரும் பேனாம். சுகாதா ரத்தின் வெளிப்பாடு ஒரு நாகரிகம். தயவுசெய்து எல் லோரும் மனது வைத்து, ஒரு மித்து, மருத்துவமனை மல சல கூடத்தை திருத்தி அமைத்து, துப்புரவு செய்து, துப்புரவு செய்வித்து, மன தால் சிந்தித்து, இதற்கு மன உதவி, உடல் உதவி, பண உதவி நல் ஆலோசனைகள் வழங்கி இறை அருள் பெற உங்களை அன்புடன் வேண்டு கின்றோம்.

LOVE ALL
SERVE ALL

எல்லோரிடத்தும் அன்பு செய்! எல்லோருக்கும் சேவை செய்! — இதுவே இறைவன் அருளைப் பெற சிறந்த மார்க் கம்.

★

# சுகாதார நிகழ்ச்சித் திட்டங்கள்

நல்லூர், மே 6

உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு எதிர் வரும் சனிக்கிழமை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினரால் ஆனைக் கோட்டை நாவற்காட்டுப் பகுதியில் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படவுள் ளன.

இலவச மருத்துவப் பரி சோதனைகளை மேற் கொண்டு நோயாளருக்கு மருந்துகளை விநியோகித் தல் —

போசாக்கின்மையால் வாடும் குழந்தைகளுக்கு சத் துணவுகளை வழங்குதல் —

யாழ். போதனா வைத்திய சாலை, மந்திகை மருத்துவ மனைகளில் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் இரத்த தானம் செய்தல் —

ஆகிய பணிகளுடன் புலோலிமத்தி, மத்திய வைத் தியசாலையில் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளவும் வைத்தியசாலைக் கட்டடத் துக்கு வர்ணம் பூசவும் ஏற் பாடுகள் செய்யப்பட்டுள் ளன.

(ஐ-ரி-103)


# WANTED

## GREEN MEMORIAL HOSPITAL

Manipay

Wanted a Qualified or Hospital trained Dispenser. Salary according to qualification and experience.

Please apply before 24-5-99

Dr. C. Ambalavanar
Medical Superintendent

(65466)



# கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக் குஞ்சி

## செல்லத்துரை பாலசிங்கம்

(சிங்கர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத் தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி வித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த் திக்கின்றோம்.

அ. அருமைநாதன் குடும்பம்

அபிராமி மருந்தகம்
பருத்தித்துறை வீதி,
நீர்வேலி.

(65471)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 26 — 08 — 1931



உதிர்வு 06 — 04 — 1999

அமரர்

## சின்னத்துரை கந்தையா

திதி: அபரபக்கம்

மண்ணில் பிறந்தவர்மாண்டு மறைவது
மன்னிய உலகின் மாட்சிமை எனினும்
கண் போல் எம்மைக் காத்த தலைவா
கல்வியொடு செல்வம் நன்கேதந்தெமை
மண்மேல் மகிழ்வுற வாழச் செய்தவுயிர்
உம்மைப் பிரிந்து உலவுமே நம்முடம்பு
எண்ணிலா ஆண்டு செல்லினும் எம் குலவிளக்கே
எம் இதய வீட்டில் என்றும் ஒளியாய்
மலர்ந்திடுவீரே!

எமது குடும்பத்தின் தலைவர் பாசமிகு தந்தை யின் மறைவின் போது உதவிகள் புரிந்த சகலருக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு உதவிகள் புரிந்தோருக்கும், ஆறுதல் அளித்தோருக் கும், அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் ளுகின்றோம்.

ஓம் சாந்தி!

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்.

இல. 25, 4 ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(சி/ 7412)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகளின் விவரங்கள்

யாழ்ப்பாணம், மே 6

யாழ். மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளில் 276 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் நூறுபேரின் விவரம் வருமாறு:-

யு. நிலாசினி — கைதடி, கே. மங்கலேஸ்வரி — கரவெட்டி மத்தி, எஸ். சுமதி — வண்ணார்பண்ணை, கே. கனகதுரை — கொடிகாமம், ஜெ. சந்திரவதனி — யாழ்ப்பாணம், எம். பிரகலாதனன் — வரணி வடக்கு, என். பாலசுப்பிரமணியம் — கச்சாய் தெற்கு, பி. செல்வரதி — வட்டுக்கோட்டை தெற்கு, பி. தயாவதி — எழுதுமட்டுவாள் தெற்கு, எஸ். ஜெயநந்தி — கோண்டாவில் மேற்கு, ரி. வரலக்ஷ்மி — தெல்லிப்பழை, கே. தவராணி — சாவகச்சேரி, எம். கீதா — யாழ்ப்பாணம், எஸ். சோபனா — உசன், கே. காந்தரூபி — நல்லூர், ரி. ஸ்ரீமுரளிதரன் — கோப்பாய் மத்தி, எஸ். சர்மிளா — வண்ணார்பண்ணை, எஸ். இராஜேஸ்வரி — தெல்லிப்பழை மேற்கு, ரி. ஞானகி — திருநெல்வேலி வடக்கு, எம். பரமேஸ்வரன் — சங்கரத்தை, பி. தவதேவினி — நல்லூர், கே. கமலநாதன் — வரணி, எஸ். வனிதா — கந்தர்மடம், வி. சித்திரா — அளவெட்டி வடக்கு, ஆர். கல்யாணி — வேலணை கிழக்கு.

கே. ரதிதரன் — கொக்குவில் கிழக்கு, ஜெ. சசிகலா — சுன்னாகம் மேற்கு, என். பகீரதி — கோண்டாவில், மேற்கு, ஏ. தயாபரன் — ஏழாலை மேற்கு, ஜெ. மரியா எழிலரசி — பாஷையூர், எம். வரதராஜன் — குடமியன், எஸ். குணேஸ்வரி — நாவற்காடு, பி. பிரியதர்சினி — சாவகச்சேரி, வி. மகாலிங்கம் — மந்துவில் கிழக்கு, கே. குலதிலகம் — சந்திரபுரம் சாவகச்சேரி, எஸ். பாஸ்கரன் — மறவன்புலோ, எஸ். ரமேஷ் — நவாலி வடக்கு, ஏ. ஜெ. அந்ரொநெற் வேனி — பண்டத்தரிப்பு, கே. சந்திரலீலா — காரைநகர், எஸ். கிருபாநந்தன் — கொக்குவில் மேற்கு, எஸ். றாகினி — மந்துவில் கிழக்கு, எஸ். செல்வரட்ணம் — புலோலி வடக்கு, வி. நந்தினி — தும்பளை, ஆர். தாரினி — கொழும்பு, கே. ஏ. ஞானேஸ்வரன் — நல்லூர், ஜி. சுசாரிதா — கந்தர்மடம், வை. சுதர்சனா — வண்ணார்பண்ணை, கே. பாஸ்கரன் — கரவெட்டி, வி. தயாவதி — இடைக்காடு, என். சுமேதா — சாவகச்சேரி.

எஸ். எஸ். ஜெயந்தினி — யாழ்ப்பாணம், என். நவதர்சனி — கல்கிசை, எஸ். ஜெயந்தா — மூளாய், கே. ஸ்ரீதா — யாழ்ப்பாணம், ஆர். கிருஸ்ணகுமார் — ஈச்சமோட்டை, கே. சுபித்தா — தெஹிவளை, கே. வானதி — நவிண்டில், வி. பத்மாசனி — துன்னாலை கிழக்கு, கே. வித்தியானந்தன் — கல்வியங்காடு, ஜி. விஜயரூபி — ஒட்டுமடம், ஆர். சாந்தினி — கரவெட்டி, ஆர். சுப்பிரமணியம் — வரணி, எம். கிருஸ்ணகுமாரி — மூளாய் மேற்கு, ஏ. றஜனி — மீசாலை கிழக்கு, ரி. அற்புதராணி — மந்துவில் கிழக்கு, ஆர். அன்பரசி — கெருடாவில், ஜே. பேரின்பநாயகி — கோப்பாய் தெற்கு, ஆர். சுமதி — கோப்பாய் தெற்கு, ஜி. ஜெயந்தி — யாழ்ப்பாணம், கே. ஸ்ரீ சாந்தமலர் — மட்டுவில் கிழக்கு, ஆர். இசைச்செல்வி — மீசாலை வடக்கு, ரி. விஜயலக்ஷ்மி — சங்கத்தானை, எம். அகிலாதேவி — கச்சாய் தெற்கு, ரி. ராஜேஸ்வரி — கொடிகாமம், ஆர். அறிவரசன் — யாழ்ப்பாணம்.

ரி. கோணேஸ்வரி — கொடிகாமம், கே. சசிகலாதேவி — வரணி, எம். ஸ்ரீ தங்கராஜா — வரணி, கே. தயாழினி — கொட்டடி, எஸ். சசிலினி — மானிப்பாய், ஆர். சாந்தன் — சுண்டிக்குளி, பி. மகாலிங்கசிவம் — வவுனியா, கே. ஈஸ்வரன் — மட்டுவில் வடக்கு, எஸ். குமுதினி — தும்பளை, எஸ். அன்னவதனி — வளலாய் கிழக்கு, எஸ். பவானி — சுண்டிக்குளி, கே. சத்தியமாலினி — இளவாலை, பி. புஷ்பாதேவி — நெல்லியடி, எஸ். புஸ்பலதா — யாழ்ப்பாணம், கே. செந்தில்மதி — நெல்லியடி கிழக்கு, கே. நாகவதனி — எழுதுமட்டுவாழ் தெற்கு, ரி. றேணுகா — இமயாணன் மேற்கு, கே. பிரேமாவதி — வண்ணார்பண்ணை மேற்கு, ஜி. மேகலைச்செல்வி — கச்சாய் தெற்கு, வி. தெய்வராணி — மயிலிட்டி வடக்கு, கே. சுகந்தன் — உசன், கே. சுமதி — புளியங்கூடல் தெற்கு, எஸ். எம். அன்னெற் மிறன்டா — குருநகர், எஸ். [illegible] — யாழ்ப்பாணம், ஜே. ஜெனொறா — காரைநகர்.

(இ-ரீ)

## கண்ணீர் அஞ்சலி

05 — 05 — 99 அன்று அமரரான

### கோவிந்தபிள்ளை தெய்வேந்திரம்

(அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.
இலங்கை வங்கி — பருத்தித்துறை)

முத்தான முப்பத்தெட்டாண்டுகள்
சேவை தன்னை
சத்தாக எம் இலங்கை வங்கிக்கு
தானீந்து
சாதனை படைத்திட்ட
தெய்வேந்திரம் ஐயா
வேதனை எமக்கீந்து
விடை பெற்ற வேகமென்ன
கம்யூட்டர் வேகமென்ன
நாம் புகழும் உம் வேகம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்.
இலங்கை வங்கி - பருத்தித்துறை.

(65484)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### செல்லத்துரை பாலசிங்கம்

(சிங்கர்)

நீர்வேலி வடக்கு, நீர்வேலி

தோற்றம் 12—02-1937 — மறைவு 02 05—1999

உதிக்கின்ற சூரியனே மறைந்திட்டாலும்
பாலசிங்கம் ஐயா மறையாரென்றெண்ணி
நாங்களும்
இதயத்தில் நம்பிக்கை மிகவும் கொண்டே
இருந்திட்டோம் ஆனால் இன்றிவரில்லை!
உதிக்கின்ற நாளெல்லாம் இருளேயாக
உள்ளத்தில் வேதனைதான் சுமையாய் ஏற
சிங்கருக்கு அஞ்சலியைச் செலுத்துகின்றோம்!

கணக்கில் வல்ல பாலசிங்கம் ஐயா!
உம் கணக்கில் இறைவன் கண்ணாயிருந்தானோ?
பெட்டாவில் உன் பெயர் பதித்து
பெருமையாய் எங்களுடன் உறவாடினாய்!
உதட்டினில் சிரிப்பும் உள்ளத்தில் தூய்மையும்
இணைந்த நல் பாலசிங்கம் ஐயா!
திடீரென எம்மைத் துயரில் ஆழ்த்திவிட்டீரே!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.
அமரரின் ஆத்மா சாந்தியடைவதாக!

பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

18/1, டாம் வீதி, கொழும்பு.
104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(65477)

## சமூகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 6

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்கமாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றுலாவுக்குத் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்களை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6-15 மணிக்கு நல்லயன் நடுநிலையத்துக்கு சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. [இ-6]

## கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்கமாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ''உறவுக்கு வேண்டிய அடிப்படைத் திறன்கள்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் மாலை 4-00 மணி முதல் 5-00 மணி வரை நல்லாயன் நடுநிலையத்தில் நடைபெறும்.

அருட் தந்தை டேமியன் அடிகளார் மேற்படி தலைப்பில் இரு நாள்களும் உரை நிகழ்த்துவார். [இ-6]

## யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம், மே 6

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் ஆண், பெண் இருபாலாருக்கும் யோகாசன வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. (ஐ)

## படைக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்)

சித்திரவதை செய்கிறார்கள்.

அதைவிட தமிழ் மக்களை — தமிழ் இளைஞர்களை — அரசு வேறு கண் கொண்டே நோக்குகின்றது. இந்த நிலையில் தமிழ் இளைஞர்கள் எவ்வாறு இராணுவத்தில் சேர்வர்? — இப்படி அவர் கேள்வி எழுப்பினார்.

'புளொட்' அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் இணைப்பதன் மூலம் தமிழர்களும் படைகளில் உள்ளனர் என்பதை உலகுக்கு காட்டவும் —

புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் தமிழ் இளைஞர்களைப் பயன்படுத்தலாம் எனக் கருதுவதாலும் — அரசு இந்தச் செயலில் இறங்கியுள்ளது. இந்த முயற்சி படுதோல்வியில்தான் முடியும் — என்றார்.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கருத்து வெளியிடுகையில் சொன்னதாவது:-

தமிழர்களை மோதவிட்டு அவர்களைக் கொல்லும் முயற்சியாகவே படைக்கு தமிழ் இளைஞர்களை சேர்க்கும் செயல் அமைகின்றது.

இந்த முயற்சியை நாம் கடுமையாக எதிர்க்கிறோம் — என்றார்.

(இ-3-6)

வலிகாமம் மேற்கு

## பிரதேச சபை, சுழிபுரம்

## முக்கிய அறிவித்தல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் எமது சபைக்கோ அல்லது தனியாருக்கோ சொந்தமான வியாபார நிலையங்களுக்கு முன்பாகச் சபையின் முன் அங்கீகாரமின்றி அமைக்கப்பட்டுள்ள கொட்டகைகள், வேறு அமைப்புகள் யாவற்றையும் 07-06-99 ஆம் திகதிக்கு முன் அகற்றி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கட்டட அமைப்புகள் (திருத்தங்கள் உட்பட) வீடுகள், கிணறுகள், மலகூடங்கள், சுற்றுமதில்கள், நீர்த்தாங்கிகள் உட்பட சபையின் அனுமதியைப் பெற்றபின்பே கட்ட அனுமதிக்கப்படும்.

குளிர்பானங்கள் (ஐஸ்) விற்பனை செய்வோர் பிரதேசசபைக்கு விண்ணப்பித்து அனுமதி பெற்ற பின்பே விற்க அனுமதிக்கப்படுவர்.

மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு அமைவாக நடக்கத் தவறியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ந. திரிலோகநாதன்
தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.

(சி/7442)

## மெமோறியல்

## அன்னை வாழ்த்துகிறாள்!

வாழ்க! வளர்க!!

1998 டிசம்பர் க. பொ. த. (சா த) பரீட்சையில்
மகத்தான சாதனை படைத்த
அன்புச் செல்வங்கள்

| | |
|---|---|
| யோ. திவாகர் | 8 D, ஆங். இல. C |
| க. குயிலினி | 6 D, 2 C |
| ந. மயூரன் | 6 D, 1 C |
| சு. சுவேந்திரன் | 5 D, 2 C |
| செ. பிரதீபன் | 5 D, 1 C, 1 S |
| யோ. நிலானி | 4 D, 4 C |
| தே. அன்ரனிராஜா | 3 D, 3 C, 1 S |
| க. மீனலோஜினி | 3 D, 3 C, 1 S |
| ந. ரகுலதரன் | 2 D, 4 C, 1S |
| த. கிரிஜாயினி | 2 D, 5 C |
| க. ஐங்கரன் | 2 D, 4 C, 1 S |

இத்துடன் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் இத்தியடைந்து உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்ற ஏனைய 42 மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.

(65481)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரமிட்
வீடியோ CD
வெளியீடுகள்!

- கணேஸ்
- காலேஜ் கலாட்டா
- சின்னத்துரை
- நினைவிருக்கும் வரை
- ஆனந்த மழை
- பூந்தோட்டக் காவல்காரன்
- நினைவே ஒருசங்கீதம்

வீடியோ
விமல்
யாழ்ப்பாணம்.
(சி/7448)

A/L 2000
கணக்கீடு
பங்குடைமை
பிரிவு II
ஆரம்பம்: 08 - 05 - 99
சனி 1-00 மணி
ஆசிரியர்:
by: முகுந்தன்
பொருளியற்
கல்லூரி
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(65448)

NEW SCIENCE COLLEGE
JAFFNA
A/L 2001
இணைந்த கணிதம்
பகுதி
நிலையியல்
[STATICS]
ஆரம்பம்: 01 — 05 — 1999
— A. பத்மநாதன்.
[65457]

விக்னா கல்வி நிறுவனம்
கலை, வர்த்தக வகுப்புகள்
A/L 2001
புதிய பிரிவு ஆரம்பம்: 09 - 05 - 1999
8.00 மணி

| | | |
|---|---|---|
| கணக்கியல் | — | திரு. பாலவாசன் |
| பொருளியல் | — | திரு. விக்கி |
| வர்த்தகம் | — | திரு. நந்திஸ் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| தமிழ் | — | திரு. லிங்கம் |
| இந்துநாகரிகம் | — | திரு. பத்மராஜா |
| புவியியல் | — | செல்வி நிர்மலா |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு. மதி |
| அரசியல் | — | திரு றொபின்சன் |
| கிறிஸ்தவம் | — | திரு. வசந்தன் |
| பொது அறிவு | — | உங்கள் ஆசிரியர் |

(65473)

# பல்கலை ஊழியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 6

யாழ். பல்கலைக்கழக போதனை சாரா ஊழியர்களால் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் வேலை நிறுத்தப்போராட்டத்தை மேலும் விஸ்தரிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமைகாலை 10 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (இ-7)

## மானிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்)

காவலரும் அலுவலகக் காப்பாளரும் அவர்களை வழி மறித்தனர் என்றும்—

வழி மறித்தவர்களை நோக்கி அந்த இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் — தெரிவிக்கப் பட்டது.

இந்தச் சம்பவத்தின்போதே மெய்ப்பாதுகாவலரான ஜீவரத்தினம் அன்ரனி (வயது 23) காயமடைந்தார்.

அலுவலக அறைக்குள் அப்பொழுது கடமையில் இருந்த பிரதேச சபைத் தலைவர் சூட்டு சத்தம்கேட்டுஅறைக்கு வெளியே ஓடி வந்தார்.

அந்த இளைஞர்களில் ஒருவர் பிரதேச சபைத் தலைவரைச் சுட முற்பட்டதாகவும்—

பிரதேச சபைத் தலைவர் தம்மிடமிருந்த துப்பாக்கியால் அவர்களை நோக்கிச் சுட்டுவிட்டு பின் வழியால் தப்பிச் சென்று பாதுகாப்புத் தேடிக் கொண்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் இளைஞர்கள் இருவரும் சைக்கிளில் தப்பிச் சென்று விட்டனர்.

இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது பிரதேச சபைத் தலைவரின் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.

இளைஞர்களின்துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இடுப்புக்குக்கீழே தொடைப்பகுதியில் காயமடைந்த மெய்ப்பாதுகாவலரான ஜீவரத்தினம் அன்ரனி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு முற்பகுதியில் குடாநாட்டில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்ற பின்னர் இதுவரை யாழ். மாநகர சபையின் இரண்டு மேயர்கள் உட்பட ஏழு உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள கொல்லப்பட்டுள்ளனர்,

(இ-5-36-90-173)

# கொட்டும் மழையில் பம்பலப்பிட்டி சுற்றி வளைப்பு

கொழும்பு, மே 6

பம்பலப்பிட்டிப் பகுதியில் நேற்று அதிகாலை 5 மணி தொடக்கம் சுற்றி வளைக்கப்பட்டுப் பல தமிழ் இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டனர்.

பொலீஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக இந்தச் சுற்றி வளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

குறிப்பிட்ட பகுதியில் நேற்றுக் காலை பலத்த மழை பெய்தபோது சுற்றி வளைப்பு காலை 10 மணி வரை தொடர்ந்தது.

இந்தச் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டவர்கள் பம்பலப்பிட்டி பொலீஸ்நிலையத்தில் வைத்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-3-5)

## மடுவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்)

திரும்பத் தயாரான சமயம் அங்கு வந்த இனந் தெரியாத நபர்கள் அந்த வானைச் சாரதியுடன் கடத்திச் சென்றனர் என்று கூறப்பட்டது

[இ-3-164]

## எந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த வேளையில் எந்தத் தமிழ் மறவனும் அரச படைகளில் இணைவதென்பது கடந்த கால அர்ப்பணிப்புக்கள், உயிர்த் தியாகங்கள் அனைத்தையும் கொச்சைப் படுத்துவதாக அமையும்.

கடந்த கால அரசுகளின் கபடத்தனமே தொடரும் என்பதைச் சகலரும் உணர வேண்டும்.

தமிழர்களுக்கென அமைக்கப்பட்ட மாகாண சபை முறையை தமிழர்கள் அனுபவிக்க விடாது ஏனைய பிரதேச மக்கள் அனுபவிக்கும் வகையில் செயற்படும் அரசின் நோக்கம் இதற்கு உதாரணமாக அமைந்துள்ளது என்பதை சகலரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இராணுவத்துக்கு தமிழ் இளைஞர்களைச் சேர்க்கும் அரசின் முயற்சியை ஆயுதங்களுடன் புலிகளுக்கு ஆள் திரட்டிக் கொடுக்கும் ஒரு முயற்சியாகவே நாம் கருதுகிறோம்— என்றுள்ளது.

(இ- 3)

# அதிபர்கள் கூட்டம்

குருநகர், மே 6

கோப்பாய் பிரிவு பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையின்பெறுபேறுகளின் பகுப்பாய்வு விவரங்களை எடுத்துவருமாறு அதிபர்களை யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி௪. நா. தணிகாசலம்பிள்ளை கேட்டுள்ளார்.

(இ-51)

# சுகாதார ஊழியருக்கு இலவச சீருடை

திருநெல்வேலி, மே 6

யாழ். சுகாதாரத் திணைக்களத்திலும், பிராந்திய அரசினர் வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு இந்த வருடத்துக்கான இலவச சீருடைத் துணிகளை வழங்குவதற்கு யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை நடவடிக்கைஎடுத்துள்ளது.

(க-135)

# சாவகச்சேரியில் கொள்ளையர் அட்டகாசம்

சாவகச்சேரி, மே 6

இரவுநேரம் துப்பாக்கியுடன் வீடு ஒன்றினுள் நுழைந்த முகமூடி அணிந்த கொள்ளையர்கள் தமது முயற்சி பலியாமற் போகவே துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் செவ்வாய் இரவு 11.15 மணி அளவில் சாவகச்சேரியில் உள்ள தாமோதரம்பிள்ளை வீதியில் இடம்பெற்றது.

கொள்ளையர்கள் பிஸ்ரல் குழு வந்திருப்பதாகக் கூறிக் கொண்டு கதவைத் திறக்குமாறு வீட்டுக்காரர்களை அச்சுறுத்தியதாகவும்—

வீட்டுக்காரர்கள் கதவைத் திறக்க மறுக்கவே வீட்டின் கதவை நோக்கி பல தடவைகள் சுட்டு விட்டு அவர்கள் தப்பிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-117-180-5-31)



திறப்பு விழா
நெல்லியடி
ஹப்பி ரெக்ஸ் ரெயிலின்
இணை நிறுவனமான
மாருதி ரெலிகொமினிகேசன்
என்னும் நிறுவனம்
பிரதான வீதி, நெல்லியடியில்
இன்று 06-05-99 காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை
வரும் சுபவேளையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.





அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
070 — 212467
021 — 3287
— உரிமையாளர்
[சி/7449]

D. M. I.
366, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
A/L 2001
பிரிவு II
ஆரம்பம்: 08 - 05 - 99
சனி 8-00 மணி.
( பழைய நேரம் )

| | |
|---|---|
| Acc. | D. SAM |
| Com. | பசில் |
| Eco. | இராஜேஸ்வரன் |
| C.G.P. | தவசேகர் |
| Log | மோகன் |
| Tam. | வழமையான ஆசிரியர் |
| Chr. | மல்லிகா |
| Hin. | ஜோதீஸ்வரன் |
| Dra. | சந்திரன் |
| Geo. | இக்னேசியஸ் |

D. SAM
(சி/7441)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06 - 05 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.